பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1	ஞாயிறு 6-11-38 வெகுதான்யஹு ஐப்பசிமீ 21உ	முத்து 6

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
1. காங்கிரஸும் அபேதவாதிகளும்	....	122
2. குறிப்பு	...	124
3. சிட்டை	...	126
4. போகிற போக்கில்	...	127
5. கவலையற்ற வாழ்வு (சுத்தானந்த பாரதி)	...	129
6. கிராம சேவை (ரா. குஞ்சிதபாதம்)	...	130
7. வலை வீச்சு	...	132
8. சிதைந்த சுவர்க்கம் (என். சிதம்பர சுப்ரமண்யன்)	...	134
9. வறுமை முகம் (வி. வே. நரசிம்ஹன்)	...	137
10. துணுக்குகள்	...	140
11. சினிமா ஒரு கலையா? (வே. சு. ராமகிருஷ்ணன்)	...	141
12. புத்தக விமர்சனம்	...	142
13. சென்னையில் சாந்தா ஆப்தே	...	143

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் கதைகளெல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,

காங்கிரஸும் அபேதவாதிகளும்

மதுரை மகாலக்ஷ்மி மில் வேலை நிறுத்த சம்பந்தமாக நடந்த சம்பவங்களிலிருந்து பல சங்கடமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் சர்க்காரின் கீழ் தடியடியும் அடக்குமுறையும் நடக்கின்றன; அபேதவாதிகள் மறியல் செய்கிறார்கள். வேலையிலிருந்து நிறுத்தப்பட்டவர்கள் பாடு ஒருபுற மிருக்கட்டும்; வேலை நிறுத்தம் செய்தவர்கள் குறைகள்கூட தூர இருக்கட்டும். அவர்களுக்கு உதவியாக, அவர்களுடைய கட்சியை ஆதரிக்க முன்வந்து, முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நடுவில் நின்று, அபேதவாதிகள் நிலைமையை நெருக்கடியாக்குவதால் தான் இன்று அது இவ்வளவு தூரம் வளர்ந்துவிட்டது. தகராறில் தொழிலாளி இருக்கிற இடம் தெரியவில்லை; முதலாளி இருக்கிற இடம் கூடத் தெரியவில்லை. பொதுவாக, இந்த மாதிரி வேலை நிறுத்தங்களில் நடு மனிதனுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் இடையே வம்பு வளர்ந்து முற்றி வினையாக முடிகிறது. சர்க்கார் முதலாளி வகுப்புக்கு பலம் கொடுக்கிறது போன்ற நிலைமையும் ஏற்படுகிறது. அதுதான் முக்கியமான பலன்.

அபேதவாதமும் அபேதவாதிகளும் இந்நாட்டில் ஓரளவு தலையெடுத்துவிட்டதில் சந்தேகமில்லை. அபேதவாதம் என்பது எதுவாயிருந்தாலும், தற்காலம் அபேதவாதிகள் சொல்லுவதும் செய்வதும் அதன் லட்சியத்திற்கு ஆனவைகள் அல்ல. அவர்கள் அங்கத்தினர்களாயிருக்கும் காங்கிரஸின் கொள்கைக்கு ஒத்ததல்லவென்பதும் நிச்சயம்.

தற்காலம் காங்கிரஸ் அபேதவாதக் கட்சி தனி லட்சியமற்றதாக இருக்கிறது. இந்திய நிலைமைக்குப் பொருந்தின ஒரு நிர்மாண திட்டம் அதற்குத் தனியாக இல்லை. காங்கிரஸிலிருக்கும் மற்றொரு பிரிவிற்கு அது ஒரு எதிர்க்கட்சி போல இருக்கிறதே தவிர, அதற்கு நாட்டில் தனிச் செல்வாக்கு இல்லை. அபேதவாதிகளுக்குக் காங்கிரஸைவிட்டு விலகவும் தைரியமில்லை; காங்கிரஸ் பெருவாரிக் கட்சியின் திட்டத்தை பூரணமாகப் பின்பற்றவும் இஷ்டமில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் காங்கிரஸின் கொள்கையைப் பற்றி நினைவு வருகிறது. ஸத்தியமும் அஹிம்ஸையும் நன்றாக காங்கிரஸில் நிலைபெற வேண்டுமானால், காங்கிரஸில் தூரெடுத்து அதைப் பரிசுத்தமாக்க வேண்டும் என்று காந்திஜி கூறுகிறார். ஸ்ரீ எம். என். ராயோ காங்கிரஸ் கொள்கையிலிருக்கும் 'ஸத்தியமும் அஹிம்ஸையும்' என்பதை 'அமைதியும் நியாயமும்' என்று மாற்றிக் கொள்ளலாமென்கிறார். அபேதவாதிகள் உண்மையாக ஒரு கட்சி பலத்துடன் அப்படி நினைத்தால் காங்கிரஸை விட்டு விலகி வேலை செய்யலாம். அது இரு பிரிவினருக்கும் நல்லது. ஆனால் அபேதவாதிகளுக்குக் காங்கிரஸில் இருப்பதால் தான் நாட்டில் கொஞ்சமாவது செல்வாக்கு இருக்கிறது; அதைப் பரிட்சை செய்ய அவர்கள் துணியவில்லையென்பதே அவர்கள் காங்கிரஸில் இன்றும் இருப்பதற்குக் காரணம். காங்கிரஸிற்குள்ளும் அவர்களுக்குப் பெருவாரியான ஆதரவு கிடையாது.

எப்படி இருக்க முடியும்? நாட்டின் பெருவாரியான மக்களான விவசாயிகளுடன் அவர்களுக்குத் தொடர்பு கிடையாது. சில நகரங்களிலிருக்கும் சில ஆயிரத் தொழிலாளர்களுடன் மட்டும் அவர்கள் உறவுவைத்துக்கொண்டு முதலாளி-தொழி

லாளி வர்க்கப் போரை (Class warfare) வளர்த்து அபேதவாதத்தை இந்தியாவில் நிலைநாட்டப் பார்க்கிறார்கள். அது நடக்காது. வர்க்கப் போரில் ஆரம்பிக்கும் அபேதவாதம் நமது நாட்டில் தலையெடுக்க முடியாது. பொருள் உற்பத்தி மூலங்களிலேயே வர்க்கப்போரை வேரறுத்து, விவசாயத்தையும் குடிசைத் தொழில்களையும் பலப்படுத்தும் அபேதவாதம்தான் நமது மண்ணிற்கு உகந்தது. மேல்நாட்டு அபேதவாதம் பவுனைப்போல. நாணய மாற்று விகித முறையில் அது பவுனிலிருந்து இந்தியாவிற்கேற்ற ரூபாயானால் தான் நம் நாட்டில் செலாவணி ஆகும். காந்தியம்தான் நமது தேசத்திற்குகந்த அபேதவாதத்தை அஸ்திவாரம் போட்டுக் கிளப்பும் அமைதியான முறை.

அபேதவாதம்தான் நமது லட்சியம். ஆனால் நமது அபேதவாதிகள் சரியான பாதையில் போகவில்லை என்றுதான் சொல்லுகிறோம். அவர்களுடைய தியாகத்தையும் தேசாபிமானத்தையும் நாம் குறைத்துக் கூறவே இல்லை. நமது நாட்டின் சுடர்மணிகளில் சிலர் அந்த கோஷ்டியில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் திக்கற்ற காட்டில் அலைகிறார்கள். ஆகையால் தான் அவர்கள் நல்ல எண்ணத்துடன் செய்வதெல்லாம் இப்பொழுது காங்கிரஸ் சர்க்கார்களுக்கு இடைஞ்சலாகவே முடிகிறது. அவர்களுடைய தீவிரத்தில் தமது கட்சியையே ஒரு சங்கடமான நிலைமையில் வைப்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

ஆனால் காங்கிரஸ் சர்க்கார் எடுக்கும் நடவடிக்கைகளை நாம் ஆதரிப்பதற்கில்லாமலிருக்கிறது. நேற்றுவரை தாம் கைக்கொண்ட ஒரு முறையை இன்று தமது சகாக்களை கையாளும்பொழுது, காங்கிரஸ் சர்க்கார் முன் சர்க்கார்கள் உபயோகித்த அஸ்திரங்களை உபயோகிப்பது அதன் செல்வாக்கிற்கோ சக்திக்கோ ஏற்றதல்லவென்று கருதுகிறோம். காந்திஜி சொன்னதுபோல காங்கிரஸ் சர்க்கார்கள் உள்நாட்டு அபிப்பிராய பேதங்களைக் கூட அஹிம்சை முறையில் தீர்த்துக்கொள்ள முடியாவிட்டால் என்ன பிரயோஜனம்?

காங்கிரஸ் சர்க்கார் அமுலிலிருக்கிறதென்றே வேலை நிறுத்தங்களும் அபேதவாதிகள் தலையிடும் நெருக்கடிகளும் அதிகமாகிக் கொண்டே வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. தொழிலாளிகள் சர்க்காரின் பொறுமையை மிகவும் சோதிக்கிறார்கள் என்பதும் உண்மை. அதனால்தான் காங்கிரஸ் சர்க்கார் தங்கள் மேன்மையைச் சிறப்பாகக் காட்டவேண்டிய அவசிய மேற்படுகிறது. முன் சர்க்கார்களைப் போலவே நிர்வாகத்தின் பலாத்காரத்தை ஒத்தாசைக்கு அழைத்தால் காங்கிரஸின் கொள்கை குப்பையாகிவிடும்.

நமது பிரதம மந்திரி பொறுமையின் எல்லையிலிருந்துகொண்டு நிர்வாகம் நடத்துகிறார் என்று அறிவோம். இந்தச் சோதனை வேளையில் அவர் இன்னும் பொறுமையாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். அவருக்கு அது அசாத்தியமல்ல.

ஸ்ரீ ஜீவானந்தம் முதலியவர்கள் தவறாக நடக்கிறார்கள் என்பது நமது கருத்து; ஆனால் காங்கிரஸ் சர்க்கார் அனுஷ்டிக்கும் முறையும் சரியல்லவென்று நினைக்கிறோம். தன் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கூடவா ராஜாஜியால் தன் வழிக்குக் கொண்டுவர முடியாது?

குறிப்பு

"வேதமும் வாளும்"

ஹிட்லரின் சுய சரிதையிலிருந்து அவருடைய அரசியல் லட்சியத்தைப் பற்றிய ஒரு பகுதியை இந்த முத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறோம். 1914-வருஷத்தில் எழுதிய அந்தப் புத்தகத்தில் கண்டபடியே தான் ஹிட்லர் தன் காரியங்களை சாதித்துக் கொண்டு வருகிறார் என்பது அதிலிருந்து தெரிகிறது.

அக்டோபர் மாதம் 30-ம் தேதி செய்தி ஒன்றின்படி, வெய்மார் நகரத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்பொழுது பிரசார மந்திரி டாக்டர் கொயபல்ஸ் ஜெர்மனியின் முன்னேற்றத்தை வர்ணிக்கிறார். ஹிட்லரின் சுயசரிதையை ஒரு கையிலும் வாளை ஒரு கையிலும் ஏந்தி ஒரு புதிய இளம் உலக சக்தியாக ஜெர்மனி முன்னேறுகிறதாம்!

ஐரோப்பாவில், மத்திய காலம் எனப்படும் நூற்றாண்டுகளில் கிறிஸ்து மத சம்பந்தமாக 'க்ரூஸேட்ஸ்' என்ற யுத்தங்கள் நடந்தன. அவைகளில் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த அரசர்கள் பைபிலையோ, கிறிஸ்தவ துவஜத்தையோ ஒரு கையிலும் வாளை ஒரு கையிலும் ஏந்தி மதத்திற்காகப் போரிட்டார்கள்.

இப்பொழுது ஹிட்லருடைய சுய சரிதை ஜெர்மனிக்கு வேதம் (பைபில்); ஜெர்மானியர்கள் 'நாஸிஸம்' என்ற மதத்திற்காக வாளேந்தி வெளிக் கிளம்பி விட்டார்களோ?

புறம்போக்கு சாகுபடி

இந்த வாரத்தில் பிரசுரித்திருக்கும் கிராம சேவைப் பகுதியில் கிராமங்களிலிருக்கும் புறம்போக்குகளில் குடிகள் மரஞ் செடிகள் வைத்துப் பயிர் செய்யலாம் என்று சொல்லி யிருக்கிறது.

அதன் சம்பந்தமான சர்க்கார் உத்தரவு ரெவினியூ போர்டின் 19-பி நிரந்தர ஆர்டரில் விஸ்தாரமாக இருக்கிறது. ஜாரி செய்யக் கூடாத நிலங்களில், (புறம்போக்கு நிலங்களில்) அனுமதி பெற்று, குடிகள் பலகை, விறகு, அல்லது தழை முதலிய தேவைகளுக்காக மரங்கள் வைத்து விருத்தி செய்யலாம்.

ஆனால் இந்த உத்தரவு இருப்பதாகவே குடிகளுக்குத் தெரியாது. தெரிகிற இடங்களில், குடிகள் மனுச்செய்து கொள்ள வேண்டிய விஷயத்தில் இருக்கும் நிபந்தனைகளைக் கண்டு வெறித்து விடுகிறார்கள்.

இந்த உத்தரவு உண்மையில் பலன் அளிக்க வேண்டுமானால், சர்க்காரே இதில் கொஞ்சம் குடிகளுக்கு ஒத்தாசை செய்ய வேண்டியது அவசியம். இந்த உத்தரவின்படி மரங்கள் வைத்துப் பயிர் செய்வதற்கு லாயக்காக இருக்கும் நிலங்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஜாப்தா ஒன்று தயார் செய்து, சர்க்கார் தரிசுகளை விற்பனை செய்வதற்கு தண்டோரா போடுவது போல, அதையும் அதிகாரிகள் ஒவ்வொரு பசலியிலும் தண்டோரா போட்டு, குடிகளுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். தாசில்தார்களும் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் அவர்களுடைய முகாமில் இந்த நிலங்களை எவ்வளவு தூரம் ஜனங்கள் உபயோகப் படுத்துகிறார்கள் என்பதைக் கவனித்து, தகுந்தபடி உற்சாகம் அளிக்க வேண்டும்.

அப்படிச் செய்யாத வரையில் இந்த சர்க்கார் உத்தரவு ஒரு விதமான பயனும் அளிக்காது. குடிகளும் அவர்கள் பாட்டிற்குத் திண்டாடிக் கொண்டேதான் இருப்பார்கள்.

ரெவினியூ இலாகாவில் இது விஷயமாக துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டால் கிராமவாசிகளுக்கு உண்மையாகவே ஒத்தாசையாக இருக்கும்.

ஜில்லா போர்டுகள் கடமை

அதே கட்டுரையில் ஆசிரியர் ஜில்லா போர்டுகள் செய்யாமல் விட்டுவிட்ட கடமையொன்றைப் பற்றியும் குறித்திருக்கிறார்.

ஜில்லா போர்டுகள் அவைகளுடைய பார்வையில் விடப்பட்டிருக்கும் ரஸ்தாக்களின் பக்கங்களில் இருக்கும் புறம்போக்

குக்களில் மரங்கள் வைத்துப் பயிர் செய்ய வேண்டுமென்று ஸ்தல ஸ்தாபன சட்டத்தில் இருக்கிறது. ஆனல் பெரும்பான்மையான ஜில்லா போர்டுகள் இந்தக் கடமையைச் செய்யவே இல்லை. செய்திருந்தால் நமது நாட்டில் இவ்வளவு வருஷங்களில் எவ்வளவு பழ விருக்ஷங்களும் இதர உபயோகமான மரங்களும் பலன் அளித்துக்கொண்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்தால் ஜில்லா போர்டுகளின் அசிரத்தை பெருங் குற்றமாகிறது.

ஸ்தாபனச் செலவில் ஏராளமான பொதுப் பணத்தை விழுங்கும் இந்த போர்டுகள் கடமையைக்கூட செய்யாமல் எதற்காக இருக்கவேண்டு மென்று தெரியவில்லை.

இது சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் ஜில்லா போர்டுகள் மற்ற கடமைகளைச் செய்து முடிக்கும் முறையை நாம் நினைக்காமல் இருக்க முடியவில்லை. ரோட்டுகள் நிலைமையைப்பற்றி பஸ் பிரயாணிகளைக் கேட்டால் தெரியும். பள்ளிக்கூடங்கள் நிலைமையைப் பற்றி உபாத்தியாயர்களைக் கேட்டால் தெரியும். அவர்களைக் கேட்பானேன்? நமக்கே நன்ருகத் தெரிகிறது. இப்பேர்ப்பட்ட சக்தியற்ற ஸ்தாபனங்கள் உயிர் வாழ்வானேன் ?

ஜில்லா போர்டுகள் தங்கள் வருமானத்திற்கே பிறர் கையை எதிர்பார்க்கவேண்டும். தன் சொத்து என்ன என்பது ஜில்லா போர்டுக்குத் தெரியாது. ரெவினியூ இலாகா நிரந்தர கார்டியனுக இருந்துகொண்டு சகலத்தையும் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது. எவ்வளவு நாள் இந்தப் பிழைப்பு பிழைக்கிறது ?

ஆனல் காங்கிரஸ் மந்திரி சபைகூட ஜில்லா போர்டை ஒழிக்காதுபோலிருக்கிறதே !

ஸ்ரீ ராஜா புகார்

சென்ற அசெம்பிளிக் கூட்டத்தில் ஸ்ரீ எம். ஸி. ராஜாவின் ஆலயப் பிரவேச மசோதா தோல்வியடைந்ததற்குக் காரணம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவில்லாததுதான் என்பது நண்பர்கள் அறிந்த விஷயம். அது விஷயமாக ஸ்ரீ எம். ஸி. ராஜா காந்திஜிக்குப் புகார் செய்து எழுதிய கடிதங்களும் காந்திஜியின் பதில்களும் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கின்றன.

அதிலிருந்து புலப்படுவது இதுதான். ஹரிஜன இயக்கத்திற்கே தமது மகத்தான பிராயோபவேச உபவாசத்தின் மூலம் பலம் அளித்த காந்திஜியே, சந்தர்ப்பங்களை அனுசரித்துத்தான் காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதை அறிந்த வராததால், சென்னை பிரதம மந்திரியின் ஜாக்கிரதையையும் காரிய சாதன முறையையும் முற்றிலும் ஆதரிக்கிருர். ஹரிஜனங்களின் பிரச்னை காந்திஜியின் நிர்மாண திட்டத்தில் முக்கியமான அம்சம். சென்னை பிரதம மந்திரிக்காகவோ அல்லது வேறு யாருக்காகவோ அது விஷயமாக அவர் பூசி மொழுகிப் பேசித் தன் கொள்கையை விட்டுக் கொடுப்பவர் அல்ல. நமது பிரதம மந்திரியும் எந்த நிர்ப்பந்தத்திற்காகவும் காங்கிரஸ் திட்டத்தையோ அல்லது தன் உயிர்க் கொள்கைகளில் ஒன்றையோ உதறித் தள்ளுபவர் அல்ல. காந்திஜியும் நமது பிரதம மந்திரியும் ஹரிஜன இயக்கத்தில் பாடுபட்டது போல வேறு யாரும் அவ்வளவு பட்டதில்லை யென்பதும் மறுக்க முடியாத உண்மை.

அப்படியிருக்க ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் தானே தயாரித்த மசோதாவை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி ஸ்ரீ ராஜாவை ஏன் கேட்டுக்கொள்ள வேண்டும் ? இந்தக் கேள்விக்குப் பிரதம மந்திரி அளித்த பதிலை ஸ்ரீ ராஜா நம்புவதாகவே தென்பட வில்லை.

காந்திஜி சாரரம்சமாகச் சொல்லி விட்டார். தலைவர்களை நம்ப வேண்டும். தலைவர்கள் சில சமயங்களில் தங்களுடைய செய்கைகளின் காரணங்களை எல்லாவற்றையுமே பகிரங்கமாகச் சொல்லுவது கெடுதலாக முடியலாம். இந்த விஷயத்தில் பிரதம மந்திரியை நிச்சயம் நம்பலாம் ; நம்புவோம்.

ஐரோப்பாவில்

ஆயிரக்கணக்கான போல் தேசத்தவர்களை ஜெர்மனி அரஸ்ட் செய்து நாடுக் கடத்துகிறது. அவர்களில் பெரும்பாலோர் யூதர்கள். ஜெர்மனியின் தற்காப்புக்காக அவர்கள் நாடு கடத்தப்படுகிறுர்களாம். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட போல் தேசத்தார்கள் போல் தேசத்திற்குக் கொண்டுபோய் விடப்படுகிறுர்கள். ஆனுல் அவர்களில் பலரை, போலந்திற்குள் வர அனுமதிச் சீட்டு சரியாக இல்லையென்று, போலந்து அதிகாரிகள் உள்ளே விட மறுத்துவிட்டபடியால் திரும்பவும் ஜெர்மனிக்குக் கொண்டு போகப்படுகிறுர்கள். அவர்கள் மிகுந்த குதூகலத்திற்கிடையில் திரும்ப வீடடைகிறுர்கள். போலந்துக்கும் ஜெர்மனிக்கும் இது சம்பந்தமாகப் பேச்சு நடந்து ஓர் ஒப்பந்தம் உண்டானதன் காரணமாக நாடு கடத்தலை ஜெர்மனி ஒத்தி வைக்கிறது.

ஜெர்மன் பத்திரிகைகள் பஹிரங்கமாக காலனிகளைக் கேட்க ஆரம்பித்து விட்டன.

ஆராபியர்களுக்காக ஒரு இயக்கம் ஜெர்மனியில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக 'டெயிலி டெலகிராப்' கூறுகிறது.

ஹங்கேரி 48 மணி நேரத்துக்குள் தனக்குச் சேரவேண்டிய பூமியைப் பிடித்துக்கொள்ளப் போவதாகப் பயமுறுத்துகிறது. ஆனுல் ஸெக் தேசத்தின் பிரேரணையின் பேரில் எல்லைப்புற விஷயத்தைத் தீர்க்க இதாலி-ஜெர்மன் மத்யஸ்தத்தை 24 மணி நேரத்திற்குள் நாட வேண்டுமென்று தீர்மானிக்கிறுர்கள். இதன்படியே இதாலி, ஹங்கேரி, ஸெக், ஜெர்மனி இந்த நாலு தேசங்களும் ஒன்று கூடி ஆலோசனை செய்கின்றன.

ஸ்பெயின் யுத்தத்தில் கலகக்காரர்கள் எப்ரோ முனையில் வெற்றி யடைந்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

பிரிட்டிஷ் மந்திரிசபையில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. வங்காள கவர்னராயிருந்த ஸர் ஜான் ஆன்டர்ஸனுக்கு ஒரு மந்திரிப் பதவி கிடைக்கிறது.

எகிப்தில் ஓர் ஆகாயப் படையும் கப்பல் படையும் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறுர்கள்.

பாலஸ்தீனத்தில் அராபியர்கள் மூன்று நாள் வேலை நிறுத்தம் செய்கிறுர்கள்.

பார்லிமெண்டில் நடந்த விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஆட்லி மியூனிச் ஒப்பந்தத்தை வெகு காரமாகத் தாக்கிப் பேசுகிறுர்.

சீனுவில்:

ஜப்பானிய கப்பல்படை கான்டனை அடைகிறது. கான்டன் பாழடைந்த நகரம்போல் ஆகிவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. தைரியத்தை இழக்காமல் போர் செய்யும்படி சைனத்தலைவர் சையாங் கெய்ஷக் சீனரை அழைக்கிறுர். இனிமேல் சீனர் 'குரங்குச் சண்டை' தந்திரத்தைக் கைக்கொள்வார்களாம்.

இந்தியாவில்:

காந்திஜி பன்னுவில் பேசும்போது எல்லைப்புறத்தில் நடக்கும் கொள்ளைகள் தன் ஹிருதயத்திற்கு வலியையும் வருத்தத்தையும் கொடுக்கின்றன என்று உருக்கமாகப் பேசுகிறுர். உதவி இந்தியா மந்திரி மூர்ஹெட் காந்திஜியை டேரா இஸ்மயில்கான் என்ற இடத்தில் சந்திக்கிறுர்.

வைஸ்ராய் இந்தியா வந்ததிலிருந்து பத்திரிகைகள் பெடரேஷனைப்பற்றி பல விதமான ஜோஸ்யங்கள் கூறுகின்றன. வைஸ்ராய் காந்திஜியை நவம்பர் 10-ம் தேதி சந்திப்பாரென்று ஒரு கல்கத்தா பத்திரிகை கூறுகிறது.

அஸ்ஸாம் மந்திரிசபை நிலவரியைக் குறைக்கவும் மதுவிலக்கை அனுசரிக்கவும் முயற்சி செய்கிறது. ஸிந்து மந்திரிகள் காங்கிரஸ் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்வார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

ஆங்கிலோ இந்தியர்களுக்கு விசேஷ உரிமைகள் கொடுக்க வேண்டுமென்று

(128-ம் பக்கம் பார்க்க)



நண்பர்களே, ஐப்பசி மாதத்தில் அடை மழையில் கைஸர்ஹிண்டு கம்பளிகளை வாரிப்போட்டு போர்த்திக் கொண்டு இருக்கும் சுகத்தை நகரவாசிகளாகிய நீங்கள் அனுபவித்திருக்கிறீர்கள். அடை மழையில் 'பல பல' வென்று பொழுது விடியுமுன் புரண்டு ஓடும் காவேரியில் ஐப்பசி, மாதத்தில், ஸ்னனம் செய்யும் சுகத்தை நீங்கள் எப்போதாவது அனுபவித்ததுண்டா? எனக்கு இந்த வாரம் அந்த பாக்கியம் கிடைத்திருக்கிறது. துலாஸ்னனத்திற்காக நான் மாயவரம் வந்திருக்கிறேன். இப்படி புரண்டோடும் வெள்ளத்தில் புண்ய காலத்தில் காவேரியில் ஸ்னனம் செய்து முப்பது வருஷம் ஆகிறது. மெட்ரிகுலேஷன் பரீக்ஷை முதல் தடவையிலேயே பாஸ் செய்து விட்டதின் பலன் சென்னைக் கிளிக்கூட்டிலே பதினறு வயதிலேயே அடைபட்டேன். இன்றையதினம் தான் எனக்கு விடுதலை நாள். முடவனுக்கும் மோக்ஷம் கொடுத்த புண்ணிய பூமி யல்லவோ மாயவரம்! இதற்கு சாக்ஷி என்னேடு கூட பிராத ஸ்னனம் செய்யும் என் ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீ ராகவ அய்யங்கார் அவர்களே.

* * *

ஆனல், இந்தப் பரிசுத்தமான புண்ய நதியில் நமது பொது மக்கள் செய்யும் அக்கிரமத்தையும் ஆபாசத்தையும் நினைத்துப் பார்க்க என் மனம் கொதிக்கிறது. நமது நாகரீகத்தின் மேன்மையைப் பற்றி நான் சமாதானமே அடையவில்லை. மாயவரம் காவேரிக் கரையின் அழகைப் பார்த்து, பல வருஷங்களுக்குமுன், காலையில் உலாவப்போன போது மகாத்மா காந்தியின் வார்த்தைகள், ஈயத்தை உருக்கி என் நெஞ்சில் வார்த்தாற்போல் என் ஞாபகத்திற்கு வருகிறது. ஆனல் இப்படிப்பட்ட தாழ்ந்த நிலைமைக்கு வந்தது சமீப காலத்தில்தான். நெடு நாளாய் ஓடும் நீரை, பசுவைப் பாவிப்பது போல் நாம் தெய்வமாகக் கொண்டாடி வந்தோம். அந்த பக்தி இந்த மேல்நாட்டுக் கல்வி வந்தபிறகுதான் அழிந்துவிட்டது. இந்த மாயவரம் பள்ளிக்கூடத்திலேயே நான் சிறுவனுய் நாலாவது வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தபோது எனக்கு நேர்ந்த சம்பவம் ஒன்று ஓடும் நீரைக் கண்டபோதெல்லாம் ஞாபகம் வருகிறது. இவ்வளவு நல்ல ஜலத்தில் ஒரு நாள் பல் துலக்கினுல் என்ன என்று காவேரிக்குப் போனேன். ஆரம்பித்தேனே இல்லையோ, சிண்டைப் பிடித்து 'கரகர' என்று இழுத்து என்னைக் கரையில் தூக்கி தள்ளி விட்டார்கள். இதை இன்று வரையில் நான் மறக்கவில்லை. காவேரி அம்மனை தெய்வம் போல் கொண்டாடும் நமது நாட்டிற்கும், நமது நாகரீகத்திற்கும் இந்த கதி வந்து விட்டதே? வாயால் சொல்லக் கூடாத கங்கு கரையில்லாத அசுத்தங்கள் நிலத்திலும் நீரிலும் இடைவிடாமல் செய்கிறேம். ஈசனே, இதற்கு வழி கிடையாதா?

* * *

வழியே கிடையாது, வேறு வழியே கிடையாது ; ஒரே வழிதான். ஸர்க்காரின் தடி அடிதான் இதற்கு ஏற்ற மருந்து. கனம் மந்திரி ராஜனும் ராஜாஜியும் ஒன்று சேர்ந்து நமது நாட்டிற்கு இந்த விஷயத்தில் உதவி புரியவேண்டும். அசுத்தம் செய்கிறவர்களைச் சிண்டில் கை போட்டுக் கரையில் இழுத்துக்கொண்டு போய் அங்கேயே அபராதம் போட்டு வசூல் செய்து, வசூலைக்கொண்டே அந்த சுகாதார திட்டங்களை ஐந்து வருஷ காலம் நிறைவேற்றலாம். அவ்வளவு அசுத்தங்கள் நடக்கின்றன. கனம் மந்திரி ராஜன்

கொண்டு வரும் புது மசோதாவில் நிலங்களேயும் நீர்களேயும் அசுத்தம் செய்பவர்களுக்கு ஒரு அத்தியாயம் தக்க தண்டனை விதிகளுடன் ஏற்பாடு செய்யவேண்டும். காங்கிரஸ் மந்திரி சபை இது ஒன்றை நமது நாட்டில் சீர்திருத்தம் செய்து முடித்தால், இதனுலேயே ஜன்ம சாபல்யம் ஆகும் என்பதற்கு சந்தேகமில்லை. ஜஸ்டிஸ் கட்சியினர்கூட இதை எதிர்க்க மாட்டார்கள். சர் பன்னீர் செல்வம் கூட ஆமோதிப்பார். இந்த சுகாதார சீர்திருத்தத்திற்காக நமது சோழ நாட்டில் எவ்வளவு ஹிம்சை செய்தாலும் அந்த ஹிம்சை உத்தமமான அஹிம்சையாகும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. அப்படி உங்களுக்கு சந்தேகமிருந்தால் மகாத்மாஜிக்குத் தபால் எழுதி அவரை நீங்கள் ஹிம்சை செய்யலாம்—தபால் இலாகாவுக்கு லாபம்தானே!

* * * *

நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தால் யார்தான் சற்று நின்று விசனிக்க மாட்டார்கள்? அதுபோல் நமது உத்தம நாகரீகத்தில் இந்தப் புல்லுருவி பாய்ந்திருக்கிறது. இந்தப் போரை வைரம் பாய்ந்த மரத்தை முழுவதும் அடிக்குமுன் நாம் ஜாக்கிரதையாகி சீர்திருத்தம் செய்து கொள்வது அவசியம். இது அன்னியில் கிராம முன்னேற்றமே கிடையாது. சுகாதாரம்தான் சுக ஜீவனத்திற்கு அடிப்படை. சுருதி வாக்கியமும் அதுவே. விஞ்ஞான வாக்கியமும் அதுவே. இரண்டுக்கும் செவி சாய்க்காமல் செவிடாக இருக்கிறோம். மணி

(126-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸர் கிட்னி கூறியதை ஸ்ரீ சத்யமூர்த்தி ஆக்ஷேபித்து வேலைக்குத் தகுந்தாற்போலத்தான் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சொல்கிருர். ஹைதராபாத்தில் சத்யாக்ரஹம் ஆரம்பமாகி தடியடியும் அடக்குமுறையும் துவஜாரோஹணம் செய்யப்படுகின்றன.

தமிழ் நாட்டில் :

காந்திஜிக்கும் ஸ்ரீ எம். ஸி. ராஜாவுக்கும் ஆலயப்பிரவேச சட்டம் சம்பந்தமாக நடந்த கடிதப் போக்குவரத்துக்கள் பிரசுரிக்கப்படுகின்றன. ஸ்ரீ எம். ஸி. ராஜா பிரதம மந்திரியின் பேரில் சாட்டும் குற்றங்களுக்குச் சமாதானம் சொல்லி ராஜாஜியின் பேரில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்று காந்திஜி கூறுகிருர்.

பிரதம மந்திரி கல்வி வார ஆரம்ப விழாவின்போது சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சம்பளங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றிக் கூறுகிருர்.

கவர்னர் திருச்சினுப்பள்ளியில் காங்கிரஸ் மந்திரிகளைப் பாராட்டிப் பேசுகிருர்.

கிருஷ்ணகிரியில் கூடிய தேசீய முஸ்லீம்கள் மகாநாடு காங்கிரஸை ஆதரிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

தீனபந்து ஆண்ட்ரூஸ் சென்னைக்கு விஜயம் செய்து கடலுக்கப்பாலுள்ள இந்தியர் நலன்களைப் பற்றி மந்திரிகளுடன் கலந்து பேசுகிருர்.

மதுரை பசுமலை மில் மறியலில் பலர் கைது செய்யப்படுகிருர்கள்.

கவலையற்ற வாழ்வு

(சுத்தானந்த பாரதி)

சுற்றிலும் சோலைப் பசுமை—அங்கே
சொக்கழ கான சுடர்மனை கட்டி,
வெற்றுரை வீண்பொழு தின்றி—கையால்
வேலைசெய் துண்டு, கலைவெறி கொண்டே,
வற்றாத நீரோடைப் பாட்டில்—கவி
வாணியின் பாட்டுங் கலந்திட வாழ்வேன்.
புற்றர வும்விட மற்றே—அன்புப்
புல்லாங் குழலுக் குருகிடச் செய்வேன்.

பசிக்குப் பழங்களை யுண்பேன்—கன்று
பட்சிக ளோடு பரவசங் கொள்வேன்.
சசி, ரவி மீன்கணம் போலே—வெளிச்
சத்தமில் லாது சகத்திற் குழைப்பேன்.
வசந்தக் குயிலோ டிசைப்பேன்—காலை
வாசம லர்களு டன்புன்ன கைப்பேன்
நிசியின் மவுன வெளியில் ஆத்ம
நேயனைக் கூடி நினைப்பை மறப்பேன்.

அஞ்ச வருவதும் உண்டோ—நெஞ்சில்
ஆத்ம ஸமத்துவம் பூத்துக் கனிந்தால்,
பஞ்சபூதச் சட்டை போர்த்த—இந்தப்
பாருயிர் யாவிலும் ஓருயிர் காண்போம்.
வெஞ்சமர் கொண்ட பகையும்—ஒரு
வேடிக்கைத் தோழன்போல் ஆடவருவான்.
தஞ்சம் பராசக்தி யென்றே—ஒரு
தாயிடஞ் சேயெனத் தூயராய் வாழ்வோம்.

கிராமப் புனருத்தாரணம்

[ரா. குஞ்சிதபாதம்]

(தொடர்ச்சி)

மேலே கொடுத்த புள்ளி விவரங்களி லிருந்து, எந்த வகைகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டு மென்பது ஒருவாறு விளங்கும். என்னென்ன செய்ய வேண்டும்? சத்தற்றுப்போன நிலத்திற்கு மறுபடியும் உரமேற்றுவது எப்படி? பிழைப்பிற்கு நிலத்தை நம்பியிருக்கும் ஜனத் தொகைக்கும், உண்மையாக நிலத்தில் பாடுபடுகிற ஜனத் தொகைக்கும் இருக்கும் தாரதம்மியம் மலைக்கும் மடுவுக்கும் என்பதுபோல இருக்கிறதே, இதைக் குறைக்க என்ன வழி? கிராமந்திரத்தில் சாதாரண ஜனங்கள் நடத்தும் வாழ்க்கையிலிருக்கும் வறுமையை எப்படிப் போக்குவது? ஆடுமாடுகளை எப்படி புஷ்டியாக அபிவிருத்திக்குக் கொண்டு வந்து, சத்தான உணவின்றி சூம்பும் குழந்தைகளுக்கு பால் நிறையக் கிடைக்கும்படி செய்வது? ஏற்கனவே சாகுபடியிலிருக்கும் $10\frac{1}{4}$ லட்சம் ஏகர்களையும், இனிமேல் சாகுபடிக்கு வரக்கூடிய 5 லட்சம் ஏகர்களையும் திறம்பட உழுது பரம்படிக்க எருதுகளை எப்படி விருத்தி செய்வது? ஆனால் நிலங்களுக்கோ வேலை செய்ய ஆட்களுக்கோ குறைவே இல்லை.

நமது கிராமாந்திர ஜனங்களுக்கு உதவி செய்ய சாதனங்களை நாம் தேட வேண்டிய தேவையே இல்லை. ஜனங்கள் தங்களுக்குத் தாமே உதவி செய்து கொள்ள நாம் உதவி செய்ய வேண்டியது தான் இப்பொழுது தேவை.

மேலே நான் டென்மார்க்கை உதாரணமாக எடுத்துக் காட்டினேன்; ஏனென்றால் விவசாயத்தையே ஜீவாதாரமாக நம்பின நாடுகளில் அதுதான் சிறப்பு மிக்க வழியில் முன்னேறி யிருக்கிறது. விவசாய விஷயத்தில் அந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தைப் போல வேறெங்கும் காணோம். படாடோபம் செய்யும் ரஷியாவின் திட்டங்களில் கூட அவ்வளவு விளைவுகள் ஏற்படவில்லை. எண்பது வருஷங்களுக்கு முன்பாக டென்மார்க்கும் நாம் இன்று இருக்கும் ஸ்திதியில் தான் இருந்தது; ஆனால் அங்கே பூமி சாரம் நம்முடையதைப் போல அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. கைத்தொழில்களுக்கே அங்கே இடமில்லாமல் இருந்தது. விவசாயத்தில் தானியத்தைத் தவிர வேறொன்றும் பயிராகவில்லை; குடியேற்றநாடுகளின் விளைவுடன் போட்டிபோட வேண்டியுமிருந்தது. அந்த நிலைமையில் டென்மார்க் தன் போக்கிலேயே போயிருந்தால் இவ்வளவு நாட்களுக்குள் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும். அந்த சமயத்தில் தான் பசு அவர்களைப் பாதுகாத்து உதவிற்று. பசுக்களின் தொகையை அதிகரிக்க வேண்டி, டென்மார்க் கூட்டுறவு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வளவுதான்; டென் மார்க்கில் சுபிக்ஷம் பாலைப்போல பொழிய ஆரம்பித்தது. இன்று டேனிஷ் சிகப்புப் பசுவும் விவசாயக் கூட்டுறவு சங்கங்களும் உலகப் பிரசித்தி அடைந்து விட்டன.

"வெள்ளாமை", வியாபாரம், வாழ்க்கை—எல்லாம் மேலோங்குவதற்காக அதை லட்சியமாகக் கொண்டு வேலை செய்யும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஜில்லா பூராவும் எங்குபார்த்தாலும் இருக்கவேண்டும்.

வெள்ளாமை விருத்தியாவதற்கு அவை இரண்டு அம்சங்களில் பாடுபட வேண்டும். (1) நிலத்தின் விளைச்சலையும் சாகுபடியையும் அதிகரிக்கும்படி செய்யவேண்டும். (2) கால் நடைகள் சம்ரக்ஷணையையும் விருத்தியையும் ஜாஸ்தியாக்க வேண்டும்.

முதலாவது அம்சத்தில் ஒரு திட்டப்படி அபிவிருத்தி ஏற்படுத்துவதற்கு பிரதேச வாரி சாகுபடியாகும் பயிர்களை நிர்த்தாரணம் செய்யவேண்டும். மண் சத்தைப் பற்றி சொன்னபோது, நெல் சாகுபடிக்கு காவேரிப் பாசன பூமிகள் அவ்வளவு நல்ல பலன் அளிக்கவில்லை என்று கண்டோம். ஆகையால் சாத்தியமாகும் வரை அங்கப் பிரதேசத்தில் நெல்லுக்குப் பதிலாக வேறு ஏதாவது பயிர் சாகுபடிசெய்ய முயற்சி செய்ய வேண்டும். உதாரணமாக கரும்பு போன்ற பயிர்கள் நன்றாக வரும்.

சீயாழி, கும்பகோணம் தாலூகாக்களில் விவசாய இலாகா இந்த திக்கில் செய்த முயற்சிகள் கொஞ்சம் பயன் அளித்திருக்கின்றன. மாயவரம், சீயாழி, கும்பகோணம் தாலூகாக்களின் பெருவாரியான பிரதேசங்களில் இம்மாதிரி சாகுபடியை மாற்றலாம். சில தனிக் கிராமங்களில் அங்கோரிடத்திலும் இங்கோரிடத்திலுமாக கரும்பை சாகுபடி செய்தாலும் உபயோகமில்லை. அதற்குத் தகுந்த வசதிகளுள்ள சில பிரதேசங்களில் மட்டும் செய்தால்தான் சரியான பலன் தரும். ஏற்றுமதிக்குத் தயாராகும் விளைபொருளோ அல்லது தொழிற்சாலைக்கு வேண்டியவைகளோ இருந்தால் அவைகளுடைய சரக்கு நயத்தையும் வகையையும் நிர்ணயிப்பது மிகவும் அவசியம். கரும்பு பயிர் செய்பவர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டால் தான் இது சாத்தியமாகும். சங்கத்தின் விதிகளின்படி அங்கத்தினர்கள் இந்தந்த வகைக் கரும்பு தான் சாகுபடி செய்ய வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டு விடும். இப்பேர்ப்பட்ட பல சங்கங்கள் கூடி கிராமங்களுக்கு அடிக்கடி வந்து யோசனை கூறுவதற்கு ஒரு விவசாய நிபுணரையும் நியமிக்கலாம். பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சும் முறையைப் பற்றியோ பூச்சி முதலியவைகளிலிருந்து பயிரைக் காக்க வேண்டிய வழியைப் பற்றியோ அவர் யோசனை கூறலாம். விளை பொருள்கள் பூராவும் அந்த சங்கத்தின் மூலமாகத் தான் விற்பனைக்குக் கொண்டுவர வேண்டும்.

தஞ்சாவூர் பட்டுக்கோட்டை தாலூகாக்களிலும் மன்னார்குடி தாலூகாவின் மேற்குப்பாகங்களிலும் ஏராளமாகத் தரிசுகள் கிடக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவுடன் ஒத்துப் பார்க்கும்பொழுது டென்மார்க்கில் மூன்றுமடங்கு அதிகமான நிலம் இருந்தும் தரிசுகள் பூராவையும் மிகச் செலவு செய்துதிருத்திச் சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. டேனிஷ் மக்களாயிருந்தால் முத்துப்பேட்டை தரிசு நிலங்களைக்கூட சீர் திருத்திப் பயிரேற்றி யிருப்பார்கள். தாராளமாக உரம் கொடுத்து, விடாமல் 'செயினேத்தி' செய்தால், எந்த நிலம்தான் விளையாது? இந்த மாதிரி விஸ்தாரமான தரிசுகள் இருப்பதற்கு மணிலாக் கொட்டை முதலிய பயிர்களை அவ்வளவிலும் விதைத்து யந்திரங்கள் உதவியால் உழவு அறுவடை எவ்வளவு விரிவாக நடத்தக் கூடாது?

விவசாயப் பிரதேசத்திற்கு மரங்கள் இன்றியமையாத உதவியும் பொக்கிஷமுமாக இருக்கின்றன. முதலாவதாக, எரிக்க விறகு பூராவும் கிடைக்கிறது. இரண்டாவது, நடவு காலத்தில் உரத்திற்குத் திண்டாடும் பொழுது தழை ஒரு முக்கியமான எருவாகிறது. செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் மரங்களெல்லாம் மொட்டையாக நிற்கும் என்றால் தழைக்கு இருக்கும் கிராக்கியைப் பார்த்துக் கொள்ளுகிறது தானே!

பழ விருக்ஷங்களுக்கும் எண்ணெய்க் கொட்டை விருக்ஷங்களுக்கும் மதிப்பு அதிகம். ஒரு ஏகராவில் வேப்ப மரங்கள் வைத்தால் சில வருஷங்களுக்குப் பிறகு அதிலிருந்து வரும் வருஷ வரும்படி (எண்ணெய் வியாபாரம் மூலம்) பயிர் சாகுபடியைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என்று கணக்கு போட்டுப் பார்த்திருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு கிராமத்தில் சில நூறு மரங்கள்தான் இருக்கின்றன. வாய்க்கால் கரைகளும் குளக்கரைகளும் தோப்புகளும் அநேக மைல்கள் இருக்கின்றன. தற்காலம் இருக்கும் விதிகளின்படி, சர்க்காரிடமிருந்து உத்தரவு பெற்றுக் கொண்டு அந்தக் கரைகளி லெல்லாம் பழ விருக்ஷங்களும் பலகை முதலியவைகள் தயார் செய்யக்கூடிய மரங்களும் வைத்து விருத்தி செய்யலாம்.

இதாலி தன்னுடைய காகித உற்பத்திக்குத் தேவையான பெரும்பான்மைச் சாற்றை அதனுடைய ரஸ்தா ஓரங்களிலிருக்கும் பாப்ளார் என்னும் மரங்களிலிருந்து எடுத்துக் கொள்ளுகிறது. நமது ரஸ்தாக்களில்கூட இரு பக்கங்களிலும் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் இப்பேர்ப்பட்ட மரங்கள் வைத்து விருத்தி செய்யலாம். விரைவில் வளர்ந்து மிருதுவாக இருக்கும் படியான மரங்கள் எவ்வளவோ இருக்கின்றன. லோகல் போர்டுகள் அவைகளிடம் ஒப்படைக்கப்பட்ட ரஸ்தாக்களின் ஓரங்களில் மரங்கள் வைத்து வளர்க்க வேண்டுமென்று ஸ்தல ஸ்தாபன சட்டத்திலேயே இருக்கிறது.

(தொடரும்)



ஹிட்லரின் லட்சியம்

ஒரு தேசம் வீரத்துடன் போர்செய்து அழியாமல் காரியத்தில் நிலைத்து நிற்கச் செய்வதுதான் ராஜ தந்திரம். இந்த லட்சியத்திற்கு அனுகூலமாக இருக்கும் எந்தக் காரியமும் நியாயமானதுதான். அந்தக் காரியத்தைச் செய்யமாட்டேன் என்று சொல்வது கடமை தவறின பெருங் குற்றமாகும். எல்லா ஜெர்மானியர்களின் நரம்பிலும் ஒரே ரத்தம் ஓடுகிறது. ஜெர்மானியர் யாவரும் ஒரு ஆட்சியின் கீழ் ஒன்றுபட்டாலொழிய அவர்களுக்கு குடியேற்ற நாடுகளை திரும்பிப்பெற உரிமை கிடையாது. அப்படி ஒன்றுபட்ட பிறகுதான் ஏருக்குப் பதிலாக வாளைத் தாங்கி யுத்தக் கண்ணீரால் சந்ததிகளுக்கு உணவு கொண்டு வர குடியேற்ற நாடுகளைப்பற்றி யோசிக்கவேண்டும்.

ஜெர்மன் ரீச் அரசாங்கம் சகல ஜெர்மானியரையும் ஒன்றாக்க வேண்டும். அதன் வேலை ஜெர்மன் ஜாதியை ஒன்று சேர்த்து ஜாதி லக்ஷணங்களைப் பாதுகாப்பது மட்டுமல்ல. அவர்களை மேலான ஸ்திதிக்குக் கொண்டு வருவதுங்கூட. இந்த பிரதிக்ஞையை இப்போது செய்து கொள்வோம்: "கடவுளுக்குப் பிரார்த்தனை செய்தோ அல்லது ஒரு சர்வதேச சங்கத்தில் நம்பிக்கை வைத்தோ இழந்த பிரதேசங்களைத் திரும்பிப்பெற மாட்டோம், ஆயுத பலத்தால் தான் அவைகளைப் பிடுங்கிக் கொள்ள வேண்டும்."

நன்றாக யோசனை செய்துதான் இந்தத் தீர்மானத்திற்கு வந்தேன். இழந்த தேசங்களை, சட்ட சபையில் சண்டப் பிரசண்டமாகப் பேசுவதால், திரும்பிப் பெற முடியாது. கூரிய கத்தியால், ரத்தப்போரால், தான் திரும்பிப் பெறவேண்டும்.

இந்தக் கத்தியைச் செய்வதுதான் ஒரு தேசத்தின் உள்நாட்டுக் கொள்கையாக இருக்கவேண்டும். இந்தக் காரியத்தை நன்றாகச் செய்வதற்கு ஆயுதபாணிகளான நண்பர்களைத் தேடிக் கொள்வதுதான் அயல் நாட்டுக் கொள்கையின் லட்சியமாக இருக்கவேண்டும்.

நாஸிகளாகிய நாம் எல்லோரும் இந்த அயல் நாட்டுக்கொள்கையைத்தான் தயக்கமின்றி லக்ஷியமாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்த உலகில் ஜெர்மனிக்குச் சேரவேண்டிய பூமியைத் திரும்பப் பெறுவோம். கடவுளின் முன்பாக, நம் சந்ததிகளின் முன்பாக, அப்படிச் செய்தால்தான் நாம் ரத்தத்தைச் சிந்துவதற்கே நியாயமுண்டு.

ஜெர்மனி உலகத்தில் பெரிய ஒரு வல்லரசாகக் கூடாதென்பது இங்கிலாந்தின் எண்ணம். பிரான்ஸின் எண்ணம் என்னவென்றால், ஜெர்மனி ஒரு அரசாகவே இருக்கக் கூடாதென்பதுதான். இரண்டுக்கும் ரொம்ப வித்தியாசந்தான்! நாம் இன்று உலகத்தில் பெரிய இடம் தேடிக் கொள்ள விரும்பவில்லை. நமது தந்தையர் நாட்டின் உயிரைக்காப்பாற்ற, ஒற்றுமையை உண்டாக்க, நம் குழந்தைகளுக்குத் தினசரி உணவளிக்க, சண்டை போடுகிறோம்.

'சமாதானம் சமாதானம்' என்று பேசுபவர்களெல்லாம் முதலில் ஜெர்மனி உலகத்தை ஜெயிப்பதற்கு உதவி செய்யட்டும். அப்புறம் சமாதானத்தைப் பற்றிப் பேசலாம். (சுயசரிதை)

யுத்தப் பேய்

இப்போது மனிதனின் ஆத்ம சக்தி குன்றி வீரியமே தொலைந்து விட்டதைக் காண்கிறேன். நான் பேசும் நபர்களிடத்திலெல்லாம் நம்பிக்கை குன்றி, அதைரியம் குடி கொண்டிருக்கிறது. உலக சரித்திரத்தில் பெயர்பெற்ற மகான்களை ஊக்கிய அந்த ஆத்மீக வீர்யத்தையும், நம்பிக்கையையும் இப்போது கொழுந்து விட்டு எரியும்படி செய்ய வேண்டும்.

இப்போது இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும், துப்பாக்கிக் கட்டையைத் தூங்குவதைவிட வேறொரு ஓர் உயர்ந்த வேலையை நாம் கொடுக்க வேண்டும். நம்பிக்கை குன்றிப் போயிருக்கும் இளைஞர்கள் கதறுவதை நான் கேட்கிறேன். இம்மாதிரி விஷயங்களுக்கு பெரியவர்களான நாமே காரணமல்லவா ?

இந்தத் தேசத்திலும் வெளி தேசத்திலும் இருக்கும் ஜன சமுதாயத்திற்கு, நம்முடைய குழந்தைகளுக்கு, நம்முடைய கடமை செய்து தீரவேண்டும். எவ்வகையிலாவது யுத்தத்தை நிறுத்தித்தான் ஆக வேண்டும். உலகத்திலுள்ள ஜனங்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொள்ள விரும்பவில்லை. தலைவர்களும் நிர்ப்பந்தம் வந்தாலொழிய சண்டை போடவேண்டாம் என்று சொல்லுகிறார்கள். இப்படியிருக்கும் போது எல்லோரும் பயப்படும், கஷ்டத்தைக் கொடுக்கும், யுத்தத்தைத் தடுப்பது மனுஷ்ய எத்தனத்தால் முடியாதது அல்ல. அதை நம்பிக்கையாலும், ஆத்ம சக்தியாலும், நியாய புத்தியாலும், அறிவாலும், தடுக்க முடியும் என்று நம்புகிறேன்.

—அபர்டீனில் அமெரிக்க தூதர்

கல்வி

கல்வி என்பது வாழ்விற்கு உங்களைத் தயார் செய்வதற்காக ஏற்பட்டதல்ல. ஆனால் கல்வி வாழ்வில் ஒரு பாகம். படிப்பதும் சம்பாதிப்பதும் சேர்ந்தாற் போல் நடக்கவேண்டிய காரியங்கள். பள்ளிக்கூடத்திலிருக்கும் சிறு குழந்தைகள் தங்களுடைய காய்கறித் தோட்டத்தால் பணம் சம்பாதிக்கின்றன ; தங்களுடைய அனுபவங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். எப்படிப் பயிரிடுவது, எப்படி வளர்ப்பது என்றெல்லாம் தெரிந்துகொள்கிறார்கள். அப்படித் தெரிந்து கொள்வதுதான் சிறந்த கல்வி, உண்மையான கல்வி என்பது ஒரு காரியத்தைச் செய்து செய்யத் தெரிந்து கொள்வது ; உதவி செய்து உதவி செய்யத் தெரிந்து கொள்வது, சம்பாதித்து சம்பாதிக்கத் தெரிந்து கொள்வது.

சிறுவர்களும் சிறுமிகளும் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை அறிந்து கொண்டுவிட்டால், வாழ்வில் மிகவும் சோபிப்பார்கள். ஆனால் இவர்களை உலக வாசனையை அறியாத பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுகிறோம். நாம் முயலுவதெல்லாம், பள்ளிக்கூடத்தையும் வாழ்க்கையும் ஒன்று சேர்ப்பதற்காகத்தான். அப்பொழுதுதான் படிக்கும் வருஷங்களுக்கும், வாழும் வருஷங்களுக்கும் சம்பந்தமுண்டாகும்.

தற்காலத்தை ஒட்டி வீட்டருகில் படிப்பதில்தான் எனக்கு நம்பிக்கை. மேற்படிப்பில், வேண்டுமென்றால் சகல விஷயங்களையும் ஆராய்ச்சி செய்யுங்கள். ஆனால் கொஞ்சம் பேர்களே மேற்படிப்புக்குப் போகும்போது உயர்தரக் கல்வியுடன் ஆரம்பக்கல்வியை ஏன் முடிச்சுப் போடுகிறீர்கள் ? அவர்கள் எந்த வயதிலும் பூரணமான, உபயோகமான படிப்பைப் பெறட்டும். உயர்தர படிப்புக்குப் போகாவிட்டால்கூட அவர்களுக்குத் தீர்மானமான நன்மை ஏற்பட்டது என்று சொல்லும்படி இருக்கட்டும்.

—ஹென்றி போர்டு

சிறுகதை

சிதைந்த சுவர்க்கம்

(என். சிதம்பர சுப்ரமண்யன்)

சுவர்க்கம் என்பது கட்டுக் கதையா? பகற்கனவா? கானல் நீரா? அல்லது மறைந்து கிடக்கும் உண்மையா?

இதெல்லாம் பாலுவுக்கும் ஜானகிக்கும் தெரியாது. அவர்களுடைய சுவர்க்கம் அவர்களுக்கு முன்னால், இரண்டு அடி தூரத்தில் இருந்தது.

கண்ணிருந்தும் நாம் பார்ப்பதில்லை. காதிருந்தும் நாம் கேட்பதில்லை. சுவர்க்கம் நம் முன்பாக இருந்தாலும், அதை நாம் அடைவதில்லை. ஏனென்றால், நம்முடைய முயற்சிகள் அதை நரக மாக்குவதிலேயே கழிந்து விடுகின்றன.

பாலுவும் ஜானகியும் தங்கள் சுவர்க்க யாத்திரைகளை ஆவலோடும், உத்ஸாகத்தோடும் தான் ஆரம்பித்தார்கள். பாலு நகரவாசி. முதல் பாரம் வாசித்துக் கொண்டிருந்தான். கோடை விடுமுறைக்காக மாமாவிடம் கிராமத்திற்கு வந்திருந்தான். கிராமத்தில் பொழுது போக்குக்கு வழியில்லை. சில அம்சங்கள் பிடித்திருந்தாலும், மொத்தத்தில் ரஸப்படவில்லை.

சுவையற்று, தோழர்கள் இல்லாமல், இனிமையில்லாமல் இருந்த இவ்வாழ்க்கையில், ஜானகி அவனுக்குத் துணை ஆனாள். அவளை விட்டால் அவனுக்கு வேறு கதியும் இல்லை. கசப்பும் இனிமையும் கலந்த மாறுபட்ட உணர்ச்சியோடு தான் அவளோடு சேர்ந்து விளையாட ஆரம்பித்தான். வந்த புதிதில் பெண்ணோடு விளையாடுவது அகௌரவம் என்று தோன்றினாலும், வர வர சரியாகப் போய் விட்டது.

மத்தியானம் மணி சுமார் மூன்று இருக்கும். மாமா ரேழிப் பக்கமாகப் படுத்துக் கொண்டிருந்தார். அம்மாமி பத்துப் பாத்திரங்களை ஒழுங்கு பண்ணிக் கொண்டிருந்தாள். விசிறிக் கொண்டிருப்பது போல், கொல்லைப்புற மிருக்கும் தென்னை மரங்கள் ஆடிக் கொண்டிருந்தன.

கூடத்தில் அட்டையில் ஒட்டப்பட்ட சுவர்க்கப்படம் அலர்ந்து கிடந்தது. அதற்கு முன்பாக இவ்விரு குழந்தைகளும் உட்கார்ந்து கொண்டிருந்தனர். வாழ்க்கையின் மேடு பள்ளங்களையும், உயர்வு வீழ்ச்சிகளையும், படம் பிடித்துக் காட்டிற்று அந்த சித்திரம். மனிதன் வீழ்வதையும், மனிதன் உயர்வதையும் விளக்கிக் காட்டிற்று அந்தப் படம். சுவர்க்கம் அடையும் வழி எது என்பதைக் காட்டிற்று அந்த விளையாட்டு.

காய்களை நகர்த்த ஆரம்பித்தனர். இவர்களையே, காய்களைப் போல, நகர்த்திக் கொண்டு போகிறது ஒரு சக்தி. அது அவர்களுக்குத் தெரியாது. காய்கள் இவர்களைப் போலவே, சுவர்க்கத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டன. காய்கள் தாமாக நகர்ந்து போகின்றன. குழந்தைகளின் ஜீவன்களும், ஆத்மாக்களும் கூடவே தங்கள் யாத்திரையைத் தொடங்கி விட்டன.

"இது ஒரு விளையாட்டு. நான் வேறு; இந்தக் காய் வேறு. இந்தக் காயின் சுக துக்கங்களையும் உயர்வு, வீழ்ச்சிகளையும் என்னதாகக் கொண்டு ஏன், நான் அவஸ்தைப்பட வேண்டும்! மாயையில் மூழ்கி ஏன் பிரமிக்க வேண்டும்!" என்று ஜானகி நினைத்துக் கொண்டிருக்கவில்லை. அவ்வளவு தூரம் உண்மையை அலசிப் பார்க்க மனம் பக்குவ மடைந்த ஞானியில்லை. ஆனால், அவளுடைய நடத்தையோ, சைதன்யசுத்தி அடைந்த ஒரு பழுத்த ஞானியினுடையதைப் போலத் தானிருந்தது. பாலுவுக்கு நேர் எதிராக, தோற்றாலும், ஜயித்தாலும், அவ்வளவாக அவள் அதைக் கொண்டாடுவதில்லை. சகிப்புத்தன்மை, சாந்தகுணம், அடக்கம், பொறுமை, இதெல்லாம் கொஞ்சம் தூக்கலாகவே, அவள் குணத்தில் சிதறிக் கிடந்தன. மேன்மையான அக்குழந்தைமனத்தின் நுட்பமான சஞ்சலங்கள் வெளிப்படையாகத் தெரியாது. மாடப் புறுவைப்போல், பயத்துடனும், சங்கோசத்துடனும், உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

பானு அவளுக்கு நேர் எதிரான குணத்தை உடையவன். அவனுடைய காய், ஏணி வழியாக, உயரமான ஸ்தானத்திற்கு ஏறி விட்டதோ, அவனுக்குத் தலை கால் தெரியாது. பாம்பால் விழுங்கப்பட்டு கீழே விழுந்தானே, சொல்ல முடியாத வேதனையும், துக்கமும், ஆத்திரமும், அவன் நெஞ்சை அடைத்துக்கொள்ளும். தோல்வியைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ள அநேகம் பேருக்கு முடியாது. பானு அப்பேர்ப்பட்ட மனிதர்களில் ஒருவன் தான். பானு தோற்று, ஜானகி ஜயித்து விட்டால், வீடு ரகளை தான். விளையாட்டில், எப்பொழுதும் முதலில் நிற்க வேண்டும், எப்பொழுதும் ஜயிக்க வேண்டும், என்ற திடமான ஆசை அவனிடமிருந்தது. அது மனித இயல்பு தானே? "லக்ஷ்யம் தான் எனக்குக் குறி. சாதனங்களைப்பற்றி அக்கரையில்லை. பெரிய இடத்தைக் குறி வைக்கும் நான் இச்சிறு விஷயங்களைப் பொருட்படுத்த முடியாது" என்று சொல்லும் தீரர்களைப் போல், அவனுக்குச் சுவர்க்கத்திலும், ஜயமடைவதிலும் தான் குறி. அதன் சாதனங்களையும், முறைகளையும், கொஞ்சம், தவற விடுவதில் அவனுக்குத் தயக்க மேற்படாது.

சுவர்க்க யாத்திரையிலீடுபட்ட இவ்விருவரும் பாதி வழியிலிருந்தார்கள். ஜானகி, மேலே ஏறும் போதும், கீழே விழும் போதும், தேவதையைப் போல நடந்து கொண்டாள். பானு, சாதாரண மனிதனைப் போலவே, நடந்து கொண்டான். இருவருக்கும், அடிக்கடி இந்த விளையாட்டு, துன்பத்தைக் கொடுக்கும். ஆனால், ஜானகியின் வேதனையில் ஒரு இனிமை யிருந்தது. பானுவிடம், ஒரு கசப்புத்தா னிருந்தது.

ஆரம்பத்தில், ஜானகி கொஞ்சம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள். அப்பொழுதே, பானுவிற்கு அசூயை உண்டாய் விட்டது. சிறிது நேரத்தில், சில குட்டிப் பாம்புகள், ஜானகியை கீழே இறக்கி விட்டன. பானு முந்திக் கொண்டான். அப்பொழுது அளவிலாத உத்ஸாகம். அவளைக் கேலி செய்தான். "இந்தப் பார். ஒரு எட்டிலே போயிடறேன். நீ உட்காந்திருக்க வேண்டியது தான்" என்று ஆரம்பித்தான். ஒரு எட்டில் சுவர்க்கத்தையடைய விசுவரூபியா யிருக்கவேண்டும். பானு ஒரு தாவில் சுவர்க்கத்தை அடையவில்லை. அவன் உத்ஸாகத்தோடு இருக்கும் போதே, சுமாராகப் பெரியதா யிருந்த பாம்பு ஒன்று, அவனைக் கீழே இறக்கி விட்டது. அவன் முணுமுணுத்து கொண்டும், பொறுமிக் கொண்டும், கீழே வந்து விழுந்தான்.

ஜானகிக்கு ஒரு எட்டு விழுந்து விட்டது. பானுவின் முகம், பொறாமையால் விகார மடைந்தது.

"ஜானகி, நீ தேச்சுத் தேச்சுப் போடறே, நான் இந்த ஆட்டத்தைச் சேத்துக்க மாட்டேன்."

"நான் எங்கேடா தேச்சுப் போட்டேன்?"

"இப்பத்தான் போட்டியே. இன்னொரு தரம் போடு. எட்டு விழறதா பாப்போம்."

"நான் மாட்டேன். தேய்க்காமலே, சரியாத் தானே விளையாடறேன். பொய்யும் புளுகும் எட்டுக் கட்றயே!" என்று சிணுங்கினாள் ஜானகி.

பிடிவாதத்திற்கும், முரட்டுத்தனத்திற்கும் முன்பு, நியாயமும், உண்மையும் எங்கு எடுபடப் போகிறது?

"சரி, இந்த ஆட்டத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டாம் போ" என்று சோழியை வீசி எறிந்தாள் ஜானகி. இரண்டு எண்ணிக்கை விழுந்தது. அந்த இடத்தில், ஒரு ஏணி இருந்தது. சுலபமாக, மேலே ஏறினாள் ஜானகி. பானுவின் முகம், செயலற்ற கோபத்தினால், கறுத்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு, சோழிகளைத் தூக்கினான். அவனுக்கு, ஜானகி மேலும், உலகத்தின் மேலும், கடவுள் மேலும், தன் மேலும்கூட, அளவில்லாத ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால், கோபப்பட்டு என்ன செய்வது?

ஜானகி 106வது கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தாள். ஆதியையும் அந்தத்தையும் தொட்டுக் கொண்டு, ஜீவ வர்க்கத்தையே சாப்பிடக் காத்திருக்கும் சாவைப் போல, பயங்கரமாக நின்று கொண்டிருந்தது 'அருகஷன்' என்ற முரட்டுப் பாம்பு. அதில் விழுந்து விட்

டால், மறுபடியும் யாத்திரையை, அடியிலிருந்து ஆரம்பிக்க வேண்டியதுதான்! அதிலிருந்து தப்ப வழியுண்டா?

ஜானகியைவிட, பாலுவுக்கு மனம் பதறிக்கொண்டிருந்தது. அவள், அந்தப்பாம்பினிடம் அகப்பட்டு கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தான்.

"மூணு விழப் போறது பார். 'தபாலென்று' கீழே விழப்போறே" என்று தன் விருப்பத்தை வெளியிட்டான் பாலு.

"நான் ஏன் விழறேன்? பாவிகளைத்தான் அந்தப் பாம்பு விழுங்கும். நீதான் அகப்பட்டுக்கவே" என்று காயை வீசினாள். சோழிகள் மலர்ந்து புன்சிரிப்பு சிரித்தன. அவள் பாம்பைத் தாண்டி விட்டாள்.

எந்த நம்பிக்கையில், அவன் பலம் முழுவதும் வைத்திருந்தானோ, அதில் இடி விழுந்து விட்டது. அவள் சுவர்க்கத்தை நெருங்கிக் கொண்டிருந்தாள். இவன் பாம்பை நெருங்கிக் கொண்டிருந்தான். அவனுக்குக் கடவுளிடமிருந்த நம்பிக்கை குறைந்தது. ஒரு திடசித்தத்துடன் விளையாட ஆரம்பித்தான். காய்களைத் தேய்த்துப் போட ஆரம்பித்தான். ஒரு எட்டு விழுந்தது.

"நீ என்னைச் சொன்னியே. நீ தேச்சுப் போடறையே?' என்றாள் ஜானகி.

"நானு தேச்சுப் போட்டேன்"

"இப்போ போடல்லே?"

"பொய்யும், புளுகும் சொல்றயா" என்று கையை ஓங்கினான் பாலு. நியாயம் தன் பக்கமில்லாதபோது, மிருக பலத்தைக் கொண்டு வரவேண்டியது தானே!

"எசப்பின ஆட்டம், கொசப்பினுப்பிலே போயிடும்" என்று சபித்துவிட்டு, அடியை வாங்கிக் கொள்ளாமல் தப்பினாள் ஜானகி.

பிராணிகளைத் தன்னிடம் வலைபோட்டிழுக்கும் யமனைப்போல, பாம்பு, பாலுவைத் தன்னிடம் இழுத்துச் சென்றது. இன்னும் இரண்டு எண்ணிக்கைத்தான் வேண்டியது. அந்த இரண்டு எண்ணிக்கையால், இவ்வளவுதூரம் வந்த பிரயாசை யெல்லாம் வீணாகும்படி, அதபாதாளத்தில் விழவேண்டியதுதான். சோழிகளை எடுத்துக் கொண்டான். அவன் மனம் நடுங்கிக் கொண்டிருந்தது. "நிச்சயமாக இரண்டு விழப்போகிறது பார்!" என்று எச்சரித்தாள் ஜானகி. முதன் முதலாக, இப்பொழுதுதான் அவனை நையாண்டி செய்தாள். அப்படியே, அவளைப் பேயறையாக அறைந்து உட்கார்த்தி வைக்க வேண்டுமென்று தோன்றிற்று அவனுக்கு. சோழிகளை வெகுநாழி குலுக்கினான். எத்தனை நாழி குலுக்கினால் தான் என்ன? காயின் எழுத்து வேறு விதமாயிருக்கிறது. சோழிகளை உருட்டினான். எந்த எண்ணிக்கை விழக் கூடாதோ, அதுதான் விழுந்தது.

"இரண்டு, இரண்டு!" என்று அவனையறியாமல் குதூகலித்தாள் ஜானகி. அவள் வார்த்தை அவனை சம்மட்டியால் அடிப்பதுபோலிருந்தது. அவளிடமிருந்த கோபம், ஆத்திரம், அசூயை, அவமானம் எல்லாம் பீறிக்கொண்டு வந்தது.

பாலு "உன் மனசு திருப்தியா யிடுத்தோல்லியோ? என்று ஆத்திரத்துடன் சொன்னான். அவளுக்கு துக்கமும், கோபமும், வந்துவிட்டது. "தூ உன்னோடே மனுஷா விளையாடுவாளோ, தூராங்காரக் காரா! நீ ஒரு அழுகுண்ணி" என்று வெறுப்போடும் ஆத்திரத்தோடும் சொன்னாள். இந்த வார்த்தைகள், மேலும் அவனுக்குக் கோபத்தை அதிகப் படுத்தின. "சீச்சீ, நீ இன்னமே என்னோடே விளையாடவேண்டாம். நான் உன்னோடே விளையாட வந்தால் என்னு கேள். கரிமூஞ்சி, கருநாக்குக்காரி!" என்று சொல்லிக் கொண்டு, அவளை ஒரு அறை அறைந்தான். அவள் 'ஐயையோ' என்று கத்திக் கொண்டு எழுந்திருந்தாள். அந்தச் சுவர்க்கப் படத்தை ஓங்கி ஒரு உதை விட்டான். காய்கள் சிதறி, எங்கோ கண்ணுக் ககப்படாத இடத்தில் ஒளிந்து கொண்டன. சுவர்க்கம் சாணிக்கருகில் தலைகீழாக விழுந்து கிடந்தது.

ஜானகி அழுகையை நிறுத்தவில்லை. பாலுவை நோக்கினாள். அவன் பயங்கரமாக, ஆவேசங் கொண்டவன்போல், நின்றுகொண்டிருந்தான். கனவுகள் உதிர்வதும் சுவர்க்கங்கள் சிதைவதும், அவள் வாழ்க்கையில் அதிகம் ஏற்படவில்லை. ஆனால் இரண்டடி தூரத்தில் எட்டிப்பிடிக்கும்படியாயிருந்த சுவர்க்கம் மாத்திரம் சிதைந்துபோயிற்று. அந்த வேதனையுடன், அவள் உள்ளே அம்மாவிடம் போனாள்.

வறுமை முகம்

(வி. வே. நரஸிம்ஹன்)

1

"கொழந்தே தனம் வா, நாம்ப இந்த ஊட்டை இன்னும் பத்து நாளுக்குள்ளே காலி செய்யணும். அய்யிருக்கு நான் ரூபா கொடுக்கணுமே, அதுக்கு இந்த ஊட்டையும் அரைக்காணி கோடக்காலி கழனியையும் ஏலம் போடப் போராங்க."

"ஏன் நாயனா, நீ எவ்வளவு பணம் கொடுக்கணும், அய்யிருக்கு?"

"அந்தக் கதையைச் சொல்லணும்னா ரொம்ப நேரம் ஆகும்மா. நீ பொரக்காமல் இருக்கச்சே பதனைந்து வருஷத்துக்கு முன்னே, சேந்தாப்போலே இரண்டு மூணு வருசம் பஞ்சம் வந்துடுச்சி. அப்போ சாப்பாட்டுக்கே வழி இல்லாமே இந்த ஊட்டையும் நம்ப நெலத்தையும் அடமானம் போட்டு நூறு ரூபா வாங்கினேன். ஆனா வட்டி அதிகம் தான். என்னா செய்யரது? ரூபாக்கு அப்போ அவசரம் இருந்திச்சு. அப்பரம்தான் நெலம் சரியா வெளையல்லே. நெல்லு வெலையும் தான்குறைஞ்சி போச்சு. ஒவ்வொரு வருசமும் முன் வாரத்திலிருந்து வந்த வரும்படி எல்லாம் அந்தந்த வருசம் சாப்பாட்டுக்கே வந்தபாடில்லே. அதனாலே கடன் வட்டி மேலே எழுதிக் கொடுத்து அறனூறு ரூபா சொச்சம் ஆயுடுச்சாம். அதுக்குத்தான் இப்போ ஏலம்போடப் போராங்களாம்?"

"சரி, அப்போ என்ன செய்யரது? யாரு நாயனா, ஊடு கொடுப்பாங்கோ?"

"அத்தையும் விசாரித்தேனம்மா. கோபாலய்யிரு அவங்க கொட்டாயிலே குடியிருக்க உத்தரவு கொடுத்தாரு மவராசன்".

"அப்படியானா நீ தம்பியைக் கூப்பிட்டு அவனுக்கு சாப்பாடு போடு நாயனா. நானு பஞ்சாங்கய்யிருகிட்டே போயி ஊடு குடி போகரத்துக்கு ஒரு நல்லநாள் பாத்துகினு, வரேன்."

சுப்பனுடைய வீடும் நிலமும் ஏலம் போடப்பட்டு அய்யரே அவைகளை எடுத்துக் கொண்டார்; சுப்பன் கடன் தீர்ந்துவிட்டது. வயது முதிர்ந்த சுப்பன் தனக்குக் கடைசி காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்களை எண்ணி எண்ணி மன முறிந்தவனாய் இறந்தான். பெண் தனத்துக்குப் பதினைந்து வயதுகூட முடியவில்லை தன் தம்பியைக் காப்பாற்றும் பாரமும் அவள் பேரில் விழுந்தது. தாய் தகப்பனற்ற இப் பெண் கூலிவேலை செய்து ஜீவித்து வந்தாள்.

இதனிடையில் ஏலம் போட்டுப் பணத்தைத் திருப்பி வாங்கின ஐயரும் ஏதோ நோய்வாய்ப் பட்டு, தன் புத்திரனை ராமநாதனையும், மனைவி பார்வதி அம்மாளையும் விட்டு பரலோகம் சென்றார்.

2

"அம்மா! அம்மா! தயிரம்மா!"

"யாரு! தனமா, இதோ வந்தூட்டேண்டிம்மா" என்று சொல்லிக்கொண்டே ஒரு வெள்ளிப்பாத்திரத்தை எடுத்துக்கொண்டு பார்வதி அம்மாள் வெளியே வந்தாள்.

"நாளை முதல் ரெண்டு காப்படி கொண்டாடி. பையன் பட்டணத்திலேயிருந்து லீவுக்கு வரான். நெய்கூட நல்ல நெய்யா நாலு ஒழக்குகொண்டா."

"சின்னய்யிரு பட்டணத்திலே என்னும்மா செய்யாராகு?"

"படிக்கிறாண்டி, வக்கீலுக்கு வாசிக்கிறான்."

"ஓஹோ, கடவுள் புண்ணியத்திலே நல்லாயிருக்கணுமா. நீங்க தயிரு, நெய்யி வாங்கி என்னை வேலைக்கும் கூப்பிட்டு என்னைக் காப்பாத்துரங்களே, இதுக்கு நான் என்ன பதில் உபகாரம் செய்யப்போரேன்" என்று கூறி தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள் தனம்.

மறுநாட்காலையில் தயிரும் நெய்யும் கொண்டுவந்த பெண்ணை, ஊருக்கு வந்து சேர்ந்த ராமநாதன் பார்த்தான். களங்கமின்மையும் ஏழ்மைத்தனமும் அவள் முகத்தில் பிரகாசித்தன. அவளைப்போல் சிறிய பெண்கள் அனுபவிக்கத் தகாத கஷ்டங்களையெல்லாம், அவள் அனுபவித்தாள் என்பது அவள் முகத்தில் விளங்கிற்று.

தேசத்திலுள்ள ஏழைமக்கள் படும் துயரத்தை புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும்

படித்த ராமநாதனுக்கு, அதைப் பிரத்யக்ஷ மாகப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

ராமநாதன் தனத்தை முதன் முதலில் பார்த்ததும் ஒரு மனக்கிளர்ச்சி உண்டான தென்னமோ வாஸ்வதம் தான். அவன் பட்டணத்தில் எவ்வளவோ அழகிய பெண்களைப் பார்த்திருக்கிறான். ஆனல் ஒருவரும் மனத்தை அவ்வளவு தூரம் 'சுரீர்' என்று குத்தி அவனைப் பெருமூச்செறியச் செய்ய வில்லை.

அவன் ஊருக்கு வந்த மறுநாள் காலையில் ஜன்னல் வழியாக தனத்தைப் பார்த்தான். 'யார் இந்தப்பெண்?' என்று தெரிந்து கொள்ள வெளியே வந்தான். அறையை விட்டு வெளியே வந்தானே இல்லையோ, அதே சமயத்தில் தனம் கிண்ணியில் தயிரைப் போட்டு விட்டு தலையை நிமிர்த்தினள். அவள் பார்வை அவன் மேல் விழுந்தது. உடனே அவள் தேகத்தில் ஒரு சலனம் ஏற்பட்டது. ஆனல் சட்டென்று சட்டியை இடுப்பில் வைத்துக் கொண்டு தளர்நடை நடந்து அவள் வெளியே செல்வதை ராமநாதன் பார்த்தான்.

3

அவன் மனதில் அப்போது ஒரு புயல் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. "இந்தப் பெண்ணை நான் போனதரம் வந்தபோது பார்க்கவில்லையே. ஒருவேளை இவள் இந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கிறளோ? உம். இவள் பார்வையில் என் இவ்வளவு ஏக்கம்? சோபையுள்ள முகத்தில் ஏழ்மை யல்லவோ கூத்தாடுகிறது? இவள் புடவையைப் பார்த்தால் அநாதை மாதிரியல்லவா தோன்றுகிறள்? கடவுளே, இதுமாதிரி கிராமத்திலிருக்கும் ஏழைகளுக்கு என்றைக்கு விமோசனம் அளிக்கப் போகிறய்?" என்று கேட்டுக் கொண்டான் ராமநாதன்.

அவன் கலங்கிய மனத்தின் முன் அப்போது தனம்வந்து நின்றுள். அவனை பரிதாபத்துடன் பார்த்துத் தலையைக் குனிந்து கொண்டாள். மளமளவென்று அவள் கண்களில் நீர் வழிந்தோடிற்று. வாய்திறந்து ஏதோ பேச முயன்றுள். ஆனல் துக்கம் தொண்டையை அடைத்தது...

சீ! சீ! இது என்ன பைத்தியக்காரத்தனம்! இவளைப் பார்த்ததும் மனம் என்னவெல்லாமோ நினைக்கிறதே என்று தன்னைக் கடிந்து கொண்டவனய் மனதை வேறு வழியில் திருப்ப அப்போது அவன் பிரயத்தினம் செய்தான்.

அந்தப் பெண் யார் என்று அம்மாவைக் கேட்கலாமா என்று அவனுக்குத் தோன்றிற்று. ஆனல் அப்படியும் அவன் கேட்க வில்லை. மறுநாள் அவளைப் பார்த்ததும் எப்படியாவது அவளுடன் ஒரு வார்த்தை பேசவேண்டும் என்று தோன்றிவிட்டது.

அம்மா குளத்திற்குப் போயிருந்தபோது, மறுநாட்காலை வீட்டில் ஒருவருமில்லை. அப்போது அந்தப் பெண் வருவாள் என்பது அவனுக்குத் தெரியும். வாசல்பக்கம் அவள் வருகிறளோ என்று பார்க்க முப்பதாவது தடவையாக வெளியே அவன் வந்தான். அதே சமயத்தில் தனம் படிக்கட்டில் ஏறி வாசற்படியில் காலை வைத்தாள்.

4

"என்ன, தயிரா?" என்று ஒரு கேள்வி போட்டுவிட்டு ஓர் புன்சிரிப்புடன் பின்னல் நகர்ந்தான் ராமநாதன்.

"ஆமாங்க தயிர்தான்" என்று சொல்லி விட்டு தலை குனிந்துகொண்டாள் தனம்.

தனத்தின் முகத்தை அவன்பார்த்தபோது வயிற்றில் பகீர் என்றது. உடனே அவன் ஹாஸ்யமெல்லாம் சாம்பலாயிற்று.

"உன் பெயர் என்ன?" என்று உணர்ச்சி யுடன் ராமநாதன் கேட்டான்.

"தனம்" என்று சொல்லி அவள் பூமியைப் பார்த்தாள்.

"உனக்கு இந்த ஊரா?"

"ஆமாம் இதே ஊருதான்."

"இந்த ஊரா? நீ யார் வீட்டுப்பெண்?"

தனம் தலை குனிந்தபடியே நின்றுள்.

"நான் உன்னைப் பார்த்ததில்லையே. உன் வீடு எங்கே இருக்கிறது?"

"எனக்கு வீடுமில்லே, வாசலுமில்லே, தம்பியும் நானுந்தான்."

"ஏன் தாயார் தகப்பனரே இல்லையா? என்னது?"

"தகப்பனர் செத்துப்போய் ஒரு வருஷம் ஆகப்போகுது."

"யார் உன் தகப்பனர்?"

"அவர் தான் சுப்பன் என்று கூப்பிடுவாக" என்று சொல்லும்போது தனம் அழுது விட்டாள்.

"சுப்பனு? சுப்பன் மகளா நீ? நான் முன்பு உன்னைப் பார்த்தபோது சின்னப் பெண்ணு யிருந்தாய். உம், பாவம்! சுப்பன் செத்துப் போய் விட்டானென்று எனக்கு அம்மா

எழுதியிருந்தாள்...ஏனம்மா அழுகிருய் ?...'' என்று தேற்றினன்.

தனம் பதில் சொல்லாமல் கண்ணீர் உகுத்த வண்ணம் அவன் முன்னே நின்றபோது அவள் கட்டியிருந்த கிழிசல் புடவை அவன் கண்களை உறுத்திற்று. அவனுக்கு அப்போது பெருத்த சந்தேகம் எழுந்தது. அவளது சோகத்திற்கு அடிப்படையாக தாங்க முடியாத வறுமைதான் காரணமாயிருக்க வேண்டுமென்பதை அவன் அறிந்தான்.

"தனம் ! உங்களுக்கு அரைக்காணி நிலம் இருக்குமே. நன்ருக விளைகிறதா ? யார் நிலத்தைப் பார்த்துக்கொள்கிருர்கள். உன் புருஷஞ ?"

'நிலம்............இல்லிங்க'' என்று பதில் சொல்லிவிட்டு வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டு "இன்னும்......கண்ணுலம்...... ஆகல்லே.........'' என்ருள்.

"என்ன ? நிலம் இல்லையா ? சுப்பன் விற்றுவிட்டான ? அவனுக்கு நிலம் என்ருல் உயிராச்சே.''

"அவர் விற்கவில்லே. எசமான்.........'' என்று கூறி தனம் நிறுத்தினுள்.

5

ராமநாதனுக்குச் சட்டென்று மனதில் ஒரு சந்தேகமும் அதைத்தொடர்ந்து ஒரு போராட்டமும் உதயமாயிற்று. காமரா உள்ளுக்குப் போனன். பெரிய பெட்டியைத் திறந்தான். அங்கே தஸ்தாவேஜைப் பார்த்தான். சுப்பன் ஏதோ தகப்பனுருக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்பதை யாரோ முன்பு சொல்லியிருந்தது அவனுக்கு ஞாபகமிருந்தது. அவன் நினைத்தபடியே தகப்பஞர் சுப்பன் நிலத்தை கடனுக்குப் பதிலாக எடுத்துக் கொண்டிருக்கிருர் !

மறு நிமிஷம் அந்தப் பத்திரத்துடன் வெளியே வந்தான். தனம் அப்போது தான் தன் கவலையை மறந்து தலையை நிமிர்த்திச் சொன்னுள்.

"சாமி, பாத்திரம் கொண்டாங்க. தயிர் போட்டுட்டுப் போறேன்.''

"தனம், இந்தா உன் நிலம். இதோ பத்திரத்தை எடுத்துக் கொண்டுபோ. இனிமேல் அது உனக்குச் சொந்தம். அதை நீ உழுது, பயிரிட்டு, அறுவடை செய்யலாம். நீ இனிமேல் அநாதையல்ல, கிழிசல் புடவையை நீ கட்டிக் கொள்ள வேண்டாம்'' என்று கூறிப் பத்திரத்தை அவள் முன் நீட்டினன்.

தனம் மலைத்துக்கல் போல் நின்ருள்.

"தனம் ! ஏன் இப்படி நிற்கிருய் ?'' என்று ராமநாதன் பதறிக்கேட்டான்.

தனத்திற்கு அவன் கூறியது காதில் விழவில்லை.

"ஏண்டி தனம், தயிர் போடாமே ஏன் தடிக் கம்புபோலெ நிக்கறே ?'' என்று அப்போது உள்ளே வந்த பார்வதி அம்மாள் சொன்னது கூட அவள் காதில் விழவில்லை.

ஆசிரியர் அறிக்கை

"பாரதமணியில்" பிரசுரிக்க வேண்டிய சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவைகளை ஆசிரியர் "பாரதமணி" 7, வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். எளிய நடையில் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தான் ஏற்றுக் கொள்ளப்படும். அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பத் தபால் தலை ஒட்டிய கவர் வைத்து அனுப்புதல் அவசியம்.

ஆசிரியர்.

அறிக்கை

"பாரதமணி" நிர்வாக சம்பந்தமான எல்லா கடிதப் போக்கு வரத்துக்களும், விளம்பரங்கள், பிளாக்குகள் யாவும் "மானேஜர்" பாரதமணி, 7 வடக்கு மாடவீதி, மைலாப்பூர் சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். விளம்பரங்கள் யாவும் புதன்கிழமைக்குள் நமது காரியாலயத்துக்கு வந்து சேரவேண்டும். பாரதமணியில் மதிப்புரைக்கு அனுப்பப்படும் புத்தகங்களும் மாற்றுப் பத்திரிகைகள், சஞ்சிகைகளும் ஆசிரியர் விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

மானேஜர்.

துணுக்குகள்

மைசூரில் உழவு மாடுகள்

மைசூர் சமஸ்தானம் முக்கால்வாசி விவசாயநாடு; உழவிற்காக அங்கே உபயோகப்படும் மாடுகளின் தொகை 1,643,867; சாகுபடியாகும் நிலம் 7116562 ஏகர்கள். ஆகவே இரண்டு மாடுகள் $8\frac{1}{2}$ ஏகரா நிலங்களை உழ வேண்டியிருக்கிறது.

தங்கத்திரவம்

ஆக்ரா காலேஜ் ஆசிரியாக இருக்கும் ஸ்ரீஜா என்பவர் இருபது வருஷங்கள் ஆராய்ச்சி செய்து ஒரு தங்கத்திரவத்தைக் கண்டுபிடித்திருக்கிறாராம். அது இந்திய விளைபொருள்களிலிருந்து தயாரிக்கக்கூடியதாம். சாதாரணமாக தங்கத்திரவம் என்று இப்பொழுது இருப்பது தங்கத்திலிருந்து தயாரித்தது. கண்ணாடி, போர்ஸிலேன் சாமான்களை அலங்கரிப்பதற்கு உபயோகப்படுகிறது.

டாக்டர் ஜாவுக்கு இதில் மேலும் ஆராய்ச்சிகள் செய்து முடிக்க ஐக்கிய மாகாண சர்க்கார் உதவி செய்கிறார்களாம்.

வேலைக்கு ஆளில்லை!

ஜெர்மனியில் வேலை செய்ய ஆள் இல்லையாம்! ஜெர்மன் சர்க்கார் உத்தியோக இலாகா விடுத்த ஒரு அறிக்கையின் படி ஜெர்மனியில் ஜூன் மாதத்தில் 3,10,000 வேலைகள் காலியாயிருந்தனவாம்! அதே, முந்தின மாதத்தைக் காட்டிலும் 30,000 அதிகமாம். சேனை, கடற்படை, விமானப் படை, பல பெரிய கட்டிடங்கள், இராணுவ யந்திரங்கள் முதலிய நிர்மாண வேலைகளில் நிரந்தரமாக வேலையிருந்து வருவதால்தான் இந்த "ஆளில்லாத் திண்டாட்டம்."

ஒரு ஆள்கணக்கு

18,000 பேர் ஒரு வருஷம் பூராவும் வேலை செய்தால் ஒரு யுத்தக் கப்பல் தயாராகிறது; 5400 பேர் வேலை செய்தால் ஒரு நாசகாரி தயாராகிறது; 4000 பேர் சேர்ந்து ஒரு வருஷத்தில் ஒரு நீர் மூழ்கியைச் செய்து முடிக்கிறார்கள்.

யுத்த தளவாடங்களில் செலவு

உலகத்திலுள்ள நாடுகள் எல்லாம் சேர்ந்து யுத்த தளவாடங்கள் தயாரிப்பதில் வருஷா வருஷம் செலவழிக்கும் தொகை 300,00,00,00,000 பவுனும்.

மோட்டார்கள்

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சராசரியாக $4\frac{1}{2}$ பேருக்கு ஒரு மோட்டார் இருக்கிறது; இங்கிலாந்தில் 18 பேருக்கு ஒரு மோட்டார் தான் இருக்கிறது. இந்தியாவிலோ 2000 பேருக்கு ஒரு மோட்டார்.

மனித காலம்

ஐரோப்பாவில் மனிதன் 50,000 வருஷங்களுக்கு முன் இருந்திருக்க வேண்டுமென்று ஜெர்மனியின் ஒரு பாகத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட எலும்புகளிலிருந்து கணக்கிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் 15,000 வருஷங்களுக்கு முன்பிருந்துதான் மனிதன் வசித்து வந்திருக்கிறானாம்!

கல்வி அறிவு எவ்வளவு?

பிரிட்டிஷ் இந்தியாவில், போன ஜனத்தொகைக் கணக்கின்படி மொத்தம் 296301570 பேரில் 4169105 பெண்கள் உள்பட 28138856 பேர்தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். சமஸ்தானங்களில் 66238422 பேரில், 919761 பெண்கள் உள்பட 5408435 பேர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

விதைப்பும் சந்திரனும்

செடிகள் முளைத்து வளருவதில் சந்திரனுடைய சம்பந்தம் ஏதாவது உண்டா என்பதைப்பற்றி ஒருவர் ஆராய்ச்சி பார்த்திருக்கிறார். அதன் பலனாக, செடி வளருவதற்கும் சந்திரனுக்கும் சம்பந்த முண்டு என்று கண்டிருக்கிறார். பௌர்ணமிக்கு இரண்டு நாள் முன்பாகப் போடும் விதைகளெல்லாம் வெகு நன்றாக முளைக்கிறதாம்.

வார்த்தை உச்சரிப்பு

அயர்லாந்தில் புதிதாக ஏற்பட்டிருக்கும் சர்க்காருக்கு ஆங்கிலத்தில் Eire என்று பெயர். அதை எப்படி உச்சரிக்க வேண்டும் தெரியுமா? அயர் அல்ல. "ஆரா" என்று உச்சரிக்க வேண்டுமாம்!

சினிமா - ஒரு கலையா?

(வே. சு. ராமகிருஷ்ணன்)

'சினிமாக்கலை' என்ற வார்த்தை இப்போது அடிபடுகிறதே, உண்மையில் சினிமா ஒரு கலையா? அப்படியானால் எவ்வளவு தூரம் நமது இந்திய நாகரீகத்தை வெளியிடும் கருவியாக அதை நாம் உபயோகித்துக் கொள்ளமுடியும்?

சுருக்கமாய்க் கூறப்போனால், சினிமா மூலம் மேனாட்டார் தாங்கள் நாகரீகத்தையோ அநாகரீகத்தையோ எவ்வளவு தூரம் நன்றாய் வெளியிடுகிறார்களோ அவ்வளவு தூரம் நாமும் செய்யலாம்.

நமது நடனம், சங்கீதம், சிற்பம், கிராமாந்தர வாழ்க்கை, பட்டணத்து வாழ்வு ஆத்மீக உயர்வு, வறுமை,—எல்லாவற்றையும் நாம் படம் பிடித்து உலகிற்குத் தெரியப்படுத்தலாம்.

கவி தாகூர் கூறியதுபோல் கலை என்பது மனிதனின் எண்ணங்களை உண்மையாய் வெளியிடுவதுதான். சிற்பம் ஒரு கலை, சித்திரம் ஒரு கலை. மற்றக் கலைகளின் மேன்மையை நன்றாக விளக்குவதால் கலைகளுக்கெல்லாம் கலையாக சினிமாவைக் கூறலாமல்லவா?

சினிமா நம் தேசத்தில் கிளம்புவதற்கு முன்பு நாடகங்கள் சிறந்து விளங்கின. நாடகங்கள் நம் நாட்டிற்குப் புதியவையல்ல. மூவேந்தர் காலத்திலிருந்து தமிழ் நாட்டில் 'இயலிசை நாடகங்கள்' சிறப்புற்றுத் தழைத்திருந்தன. ஆரம்ப காலத்தில் தெருக்கூத்துக்கள் ஏராளம். அரிச்சந்திர நாடகம், அல்லி அரசாணி நாடகம், நல்லதங்காள் நாடகம், இவைகள் எவ்வளவு பிரபல்யமடைந்து மக்கள் உள்ளத்தைக் கவர்ந்திருந்தன?

காலம் செல்லச் செல்ல, மக்கள் ருசியும் வழிகளும் மாறவே, நாடகங்களும் காலத்தை ஒட்டி மாறி புது உருவத்தில் விளங்கலாயின. சமீப காலத்தில் நாடகத் தொழில் சிலரது கைகளில் சிக்குண்டு திணற ஆரம்பித்துவிட்டது. "ஐயோ! யார் இந்த நாடகத்தில் நடிக்கிறார்கள்...... அவரா? கர்மம்" என்று தலையில் அடித்துக்கொண்டு நாடகத்தை எல்லோரும் பகிஷ்காரம் செய்யத் தொடங்கி விட்டார்கள். பையன் விஷமம் செய்தால் வீட்டில் பெரியவர்கள் "பிரும்மஹத்தி! தொலை எங்கேயாவது. தீவட்டி பிடிக்கப் போயேன். அல்லது டிராமாவிலேபோய்ச் சேர்ந்து சீரழி" என்று கூறி நாடகக்கலையில் தங்களுக்குள்ள வெறுப்பைத் தெரியப்படுத்தத் தொடங்கினார்கள்.

சினிமா வரவே, நாடகம் செத்துப் போயிற்று. ஆனால் யார் செய்த பாவமோ தெரியவில்லை, நாடகத்திற்கு இருந்த சில வியாதிகள் 'லபக்' கென்று சினிமாவைப் பிடித்துக்கொண்டன. அந்த சின்ன வியாதியைப் பெரிதாகப்பண்ணி விடாமல் ஆரம்பத்திலேயே தொலைக்கவேண்டியது கலை அபிமானிகள் வேலை; சினிமா பக்தர்கள் கடமை.

சினிமா நாடகத்தைவிட அதிகமாக நமக்கு எந்த விதத்தில் தொண்டு செய்ய முடியும்? நாடகத்திலுள்ள நடிப்பு, சங்கீதம், சம்பவம் முதலிய அம்சங்களெல்லாம் சினிமாவில் இருக்கின்றன.

நாடகத்திலிருப்பதைவிட நல்ல அம்சமும் சினிமாவில் உண்டு. குறுகிய இடத்திற்குள் மேடையில் நாடகம் முழுவதையும் நடத்தவேண்டியதாகிறது. சற்று முன் அசோக வனமாயிருந்த மேடையை இப்போது ராவணன் தர்பாராக எண்ணிக்கொள்ளும்படி வேண்டுகிறார்கள். கிட்டத்தட்ட தர்பாரென்று சொல்லும்படியான ஸீன் இருந்தால்கூட அதை ஒப்புக்கொண்டு "சரி! ராவணன் வரட்டும்!" என்று சொல்லத் தயாராக இருக்கிறோம். சினிமாவில் இப்படிக் கிடையாது. நாடகாசிரியரின் கற்பனை எங்கெல்லாம் செல்கிறதோ அங்கெல்லாம் சினிமாக்

கண்ணாடி சென்று அக்காட்சிகளைப் படம் பிடித்து நம்முன் சமர்ப்பிக்கிறது.

பாத்திரங்களின் நடிப்பையும் முக பாவங்களையும் நாடகமேடையில் நாம் தெரிந்து கொள்வதைவிட மிகவும் நன்ருக காமிராக் கண்ணாடி எல்லோருக்கும் தெரியும்படி எடுத்துக் காண்பிக்கிறது. இன்னும் இவைபோல் பல காரியங்களை சினிமா சாதித்திருக்கிறது. சிறந்த புத்தகங்களிலுள்ள மனிதர்களையும் சம்பவங்களையும் நீங்கள் தத்ரூபமாகப் பார்க்க வேண்டுமா? சமூக வாழ்வில் பெரும் புரட்சியை உண்டாக்க வேண்டுமா? தற்கால சரித்திர சம்பந்தமான காட்சிகளை சந்ததிகள் என்றும் மறக்காமல் செய்ய வேண்டுமா? மனிதனின் ஆத்மாவைத் தொட்டு அறிவு புகட்ட வேண்டுமா? மனத்தை நெகிழ்வித்து தெய்வீகமாக்க வேண்டுமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதிலாக, 'நான் இருக்கிறேனே. என்னை ஆதரிக்கமாட்டீர்களா?' என்று சினிமா மனித சமூகத்தை வேண்டுகிறது.

இவ்வளவு உயரிய கலையை அதிர்ஷ்டவசத்தால் மனித சமூகம் கண்டு பிடித்திருக்கிறது. சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சிலர் செய்யும் அக்கிரமத்தைப் பார்த்துவிட்டு, சிலர் "சினிமாவே சீக்கிரத்தில் அழிந்துவிடும்" என்று சொல்கிருர்கள். ஆனால், சினிமாக்கலை அழியுமானால், மனித வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டும் மற்றொரு சிறந்த சாதனத்திற்கு வழி ஏற்பட்ட பிறகுதான் அழியும் என்பது நிச்சயம்.

புத்தக விமர்சனம்

இந்திரா : பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் எழுதியது. சு. குருசாமி மொழிபெயர்ப்பு. அல்லயன்ஸ் கம்பெனி, மைலாப்பூர். விலை அணு 12.

பங்கிம் பாபு நீண்ட நவீனங்களைத் தவிர பல சிறு கதைகளும் எழுதியிருக்கிருர். இந்திரா அவைகளில் ஒன்று. ஆனல் இதை நீண்ட சிறு கதையென்ருே அல்லது சிறு நாவல் என்ருே சொல்லலாம்.

கதை சமூக சம்பந்தமானது. பங்கிம் சந்திருடைய நகைச் சுவையும் குண சித்திர சக்தியும் இதில் ஒருவாறு விளங்குகின்றன.

ஹிரண்மயி, ரஜனி, ராதா ராணி, இந்திரா—எல்லாம் ஒரே தினுசான கதைகள். எல்லாவற்றிலும் சம்பவங்கள் பல; ஆனல் கதா பாத்திரங்கள் ஒரு சிலரே தான். கதையும் சுருக்கமானதுதான். ஆனல் வாழ்க்கையை அப்படியே படம் பிடிக்கும் கதைகள் அல்ல இவை. ஓரளவு விபரீத அம்சமும் கலந்து இருக்கிறது.

இந்திரா மிகவும் ஸ்வாரஸ்யமான கதை. ஸ்ரீ குருஸ்வாமி அதை வெகு தெளிவாக மொழிபெயர்த்திருக்கிருர். அல்லயன்ஸ் கம்பெனியார் புத்தகத்தை வெகு நேர்த்தியாக வெளியிட்டிருக்கிருர்கள்.

ஸ்ரீ கிருஷ்ணன் தூது (வித்வான் வி. ஆறுமுகம் சேர்வை. பிரசுரகர்த்தர்கள்: கணேஷ் கம்பெனி, சென்னை)

மகாபாரதத்தை மிகவும் சுருக்கமாக கிருஷ்ணன் தூது சென்று திரும்பிய கட்டம் வரையில் ஆசிரியர் வசன நடையில் அழகாகக் கூறியிருக்கிருர்.

பாண்டவரின் குலமுறை, உற்பத்தி இவைகளைப்பற்றிக் கூறும் அத்தியாயங்கள் நன்ருக எழுதப்பட்டு படிப்பதற்கு ரஸமாயிருக்கின்றன. வில்லிபுத்தூரார் பாரதச் செய்யுட்கள் ஆங்காங்கு எடுத்தாளப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. இப் புத்தகத்தின் வசன நடை சற்றுக் கடுமையாக இருப்பதுடன், வாக்கியங்கள் கொஞ்சம் நீளமாக இருக்கின்றன. சில வாக்கியங்களை வெட்டி பிரிவு படுத்தினல் நன்ருக இருக்கும்.

சென்னையில் சாந்தா ஆப்தே

(ஒரு நிருபர்)

அன்றைக்குச் சென்னையில் ஒரு பர பரப்பு உண்டாயிற்று. பத்திரிகைகளி லும் சுவர்களிலும் புரட்சிகரமான விளம் பரங்கள் காணப்பட்டன. டிராமிலும் ஹோட்டல்களிலும் ஜனங்கள் ரகசியமாக ஏதோ பேசிக்கொண்டார்கள். ஆமாம். தமிழ் மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்த பிரபாத் நக்ஷத்திரம் ஸ்ரீமதி சாந்தா ஆப்தே சென்னைக்கு வந்து மூன்று நாட்கள் தங்கப்போகிறார் என்ற செய்தி பரபரப்பை உண்டாக்குவதில் ஆச்சரியமில்லையல்லவா?

* * *

பிராட்வே டாக்கீஸுக்கு சாந்தா ஆப்தே விஜயம் செய்தார். அவர் நடித்த படமான கோபால கிருஷ்ண அங்கே ஓடிக்கொண் டிருந்தது. தியேட்டரில் சாந்தா ஆப்தேக்குப் புகழுரைகள் கூறப் பட்டன. அப்பொழுது தலைமை வகித்தவர் ஸர். கே. வி. ரெட்டி. ஹிந்தி எதிர்ப்பாளர் ஸர். கே. வி. ரெட்டி ஹிந்திப் படமான கோபால கிருஷ்ண வுக்கு வந்திருந்து, ஹிந்தி நக்ஷத்தி ரத்திற்கு 'சபாஷ்' கொடுத்தார். இந்த விழாவிற்கு ஹிந்தியைச் சுக்கு நூறுக்கிப் பொடி பண்ணிக் கடலில் போடக் கிளம்பி யிருக்கும் வீரர் ஸ்ரீ கலிப்புல்லாவைக் கூப்பிட்டிருந்தால்கூட வந்திருப்பார்!

* * *

வில்லிங்டனில் சென்னை யுனைடட் ஆர் டிஸ்ட்ஸ் கார்பொரேஷன் சார்பில் டைரக் டர் கே. சுப்ரமண்யம் சாந்தா ஆப் தேக்கு ஒரு தேனீர் விருந்து அளித்து உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத் தார். சாந்தா ஆப்தேயையும் பிரபாத் காரர்களையும் பாராட்டிப் பேசியதுடன் அவர் சும்மா இருக்கக்கூடாதா? "ஹிந்திப் படங்களில் ஜனங்களுக்கு இவ்வளவு ஆர்வம் இருக்கும்போது ஹிந்தி எதிர்ப் பாளர்கள் ஏன் இப்படி கலாட்டா செய்கி ருர்கள்? அவர்களுக்கு சாந்தா ஆப்தே நடிக்கும் ஹிந்திப் படங்களைப் பார்க்க இலவச டிக்கட் கொடுத்துப்பாருங்கள். அவ்வளவு பேரும் சந்தோஷத்தோடு படம் பார்க்கப் போய்விடுவார்கள். அப் புறம் மறியலும் இருக்காது ஒன்றும் இருக்காது!" என்று ஒரு போடு போட்டார்.

* * *

இந்த வைபவத்திற்கு தலைமை வகித்த டாக்டர் சுப்பராயன் சினிமாவைப் பற்றி அவர் கொண்டிருந்த அபிப்பிராயத்தை பட்டவர்த்தனமாகச் சொல்ல ஆரம் பித்தார்.

"சினிமாவில் எனக்கு நம்பிக்கை இல்லை. அதைப் பார்க்கப்போவதுமில்லை. யாரா வது ஒரு படத்தின் ஆரம்ப விழாவிற்கு என்னைத் தலைமை வகிக்கக் கூப்பிட்டால் தெய்வமே என்று சிறிது நாழிகை உட் கார்ந்துவிட்டு வருவேன். கிரேக்க நாடகங் களை நான் பார்த்திருக்கிறேன். அவை களைப் போன்ற உயர்ந்த அம்சங்களுள்ள நாடகக் கலையைத்தான் நமது தேசத்தில் உண்டாக்கவேண்டும். அழிந்துபோன நமது நாடகக் கலையை திரும்பக் கொண்டு வர வேண்டும். சினிமாவில் புகழ்பெற்ற சாந்தா ஆப்தே நாடகத்திற்கு "புத்துயிர் அளிக்கவேண்டும்" என்று கூறி சினிமா பக்தர்களைத் திடுக்கிட வைத்துவிட்டார்.

* * *

இந்தக் கூட்டத்திற்குப் போன பிறகு சாந்தா ஆப்தேயைப் பற்றி ஒரு பெரிய சந்தேகம் உண்டாகிவிட்டது. ஒன்று மில்லை. அவர் பெயரையே சந்தேகத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். அவர் பெயர் சாந்தே ஆப்தே என்றுதான் நாம் இதுவரை எண்ணிக்கொண்டிருந் தோம். ஸ்ரீ கே. சுப்ரமண்யமும் அப்படித் தான் உபசாரப் பத்திரத்திலிருந்து படித் தார். ஆனல் ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதன் பேசியபோது சாந்தா பாய் என்று சொன் ஞர். போகிறது, சாந்தா என்பதாவது நிச்

சயப்பட்டுவிட்டது என்று நினைத்தபோது ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார் பேசும்போது பெயரை 'சாந்தாராம் ஆப்தே' என்று துரித காலத்தில் மாற்றி விட்டார்.

* * *

அந்தக் கூட்டத்தில் சாந்தா ஆப்தே என்ன பேசினுர் என்றுதானே கேட்கிறீர்கள்? அவர் புகழுரைகளைக் கேட்டு பிரமித்துப் போய்விட்டதாகச் சொல்லியிருப்பார். அவ்வளவு புகழுக்குத் தான் அருகதை யில்லை என்று வணக்கமாகத் தெரிவித்திருப்பார். தான் முன்னுக்கு வருவதற்கு எல்லோரும் புத்திசொல்ல வேண்டும் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் மன்ருடி யிருப்பார். முடிவில் தனக்கு வரவேற்பளித்ததற்காக வந்தனமளித்திருப்பார்.

* * *

"ஏன் அவர் என்ன பேசினுர் என்று நிச்சயமாகத் தெரியாதா? அவர் பேசுவதற்கு முன்னேயே நீர் புறப்பட்டுவிட்டிராக்கும்" என்கிறீர்களா? இல்லை. நான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. ஆனுல் முன்னுடி சாய்ந்து காதை வளைத்துக்கொண்டு சர்க்கஸ் வித்தை அத்தனையும் செய்தேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அப்படியும் சாந்தா ஆப்தே பேசியது காதில் விழவில்லை. ஏதோ ஒரு கடிதாசை 'கசுமுசு' 'கசுமுசு' என்று படித்துக்கொண்டிருந்தது யார் காதில்தான் விழும்? அதற்கென்ன அந்தக் கடுதாசை தினசரிகளில் பிரசுரிப்பார்கள். அதைப் படித்துக் கொள்ளலாம் என்ற ஆறுதலுடன் திரும்பினேன்.

* * *

சாந்தா ஆப்தேயை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் அவர் எப்படியிருப்பார் என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுவார்களல்லவா? இதோ கேளுங்கள். அவர் அதிக உயரமும் இல்லை; குட்டையுமில்லை. எலுமிச்சம் பழ நிறம். அடிக்கடி 'குபீர்' என்று சிரிக்கிருர். எப்பொழுதும் அப்படிச் சிரித்துக்கொண்டே இருக்கிருரா என்பதும் எனக்குத்தெரியாது. கண் அதிகக் கருப்பாயில்லாமல், வெள்ளைக்காரர்களுடையதைப் போல நீலமாயுமிராமல், ஆனுல் வெள்ளை வெளேரென்று பூனைக் கண்ணுயுமில்லாமல் சாதாரணமாகத்தான் இருக்கிறது. காதில் தோடு. மூக்குத்தி இல்லை. தலையில் கறுத்து சுருண்ட கூந்தல். ஆனுல் நேர் வகிர்தான். அதிகப் பருமன் இல்லை. அதிக ஒல்லியாயுமில்லை. போதுமா வர்ணனை?

சாந்தா ஆப்தேயின் முகத்தில் தெக்குத்திக்களை இருக்கிறது. ஓ! விஷயம் புரிந்துவிட்டது. அதனுல்தான் தெக்குத்திக்காரர்களாகிய நமக்கு சாந்தாவின்பேரில் இவ்வளவு அபிமானம்!

எதிரொலி

"புராணக் கதைகளில் எனக்கு பக்தி உண்டு"—ஸ்ரீ. பி. சம்பந்த முதலியார் பிரசங்கம்.

நமது புராணப்படங்களைப் பார்த்த பிறகு கூடவா?

* * *

சாந்தா ஆப்தே சினிமாவை விட்டு விட்டு சங்கீத மேடைக்குப் போகப் போகிருர். —ஒரு செய்தி.

ஏன்? தமிழ் நாட்டுக்கு சமீபத்தில் விஜயம் செய்தாரே, அப்போது ஏதாவது தமிழ் படத்தைப் பார்க்க நேர்ந்ததோ?

* * *

சினிமா பக்தர்களை 'விசிறி' என்று சொல்லலாமா? —ஒரு புகார்.

விசிறி என்ருவது சொல்கிருர்களே, மரம், மட்டை என்று சொல்லாமல்.